நவநாகரிக யுவதிகளே!
அழகு சாதனப் பொருட்கள்
★ பாக்ஸ் ★ பேஸ்
★ தொப்பிகள்
விளையாட்டுப்பொருட்கள்
பான்ஸி கூட்ஸ்
சாமான்களை
நம்பகமாகவும்
மலிவாகவும்
வாங்க நாடுங்கள்!
LUCKY-7
61 New West Market,
Jaffna.

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ 2/50

வடபகுதி சிகை அலங்கரிப்பாளர்களே!
உங்களுக்குத் தேவையான சகல ஆயுத உதிரிப்பாக உபகரணங்களுக்கும் வாசனைப் பொருட்களுக்கும் மற்றும் பிளாஸ்ரிக் வாளிகள், தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்;
லக்கி - 7
61, நவீன மேற்குச்சந்தை,
யாழ்ப்பாணம்.

கலி: 4 சுக்கில ஸ்ரீ ஆவணி 08 உ. வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 முஹறம் பிறை 21 (24-08-1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 225

## தந்தையும் மகளும் ஆனைக்கோட்டையில் கொலை

யாழ்ப்பாணம், ஆக. 24
ஆனைக்கோட்டை, உயரப்புலம் பகுதியில் நேற்றுக்காலை தந்தையும் மகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இளைப்பாறிய பொலிஸ் இன்ஸ்பெக்டர் வி. அடைக்கலமுத்து (வயது 75), நேசருள் அடைக்கலமுத்து (வயது 25) ஆகியோரே கொலையுண்ட தந்தையும் மகளும் ஆவர்.

இரு சடலங்களும் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு மரண விசாரணை நடத்தப்பட்டது. (ஓ-10)

## மாகாணசபையின்

## அதிகாரப் பரவலாக்கல் பற்றிய அறிக்கை தயார்!

திருகோணமலை, ஆக. 24
வடக்கு-கிழக்கு மாகாண சபையின் இரண்டாவது கூட்டத் தொடர் நேற்று ஆரம்பமானது. அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான யோசனைகள் பற்றிய அறிக்கை பரிசீலனைக்காக சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

நூறு பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கையை முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் சமர்ப்பித்தார். அறிக்கையைச் சபை ஏற்றுக்கொண்டபின்னர் அது இலங்கை அரசுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதனிடையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் மாகாண சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

முஸ்லிம் மக்களுக்குத் தகுந்த பாதுகாப்புக் கிடைக்கும் வரை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று முஸ்லிம் காங்கிரஸ் குழுவின் தலைவர் இஸ்ஸதீன் தெரிவித்தார். (உ-எ)

## சின்னமுத்து நோய்:

## தடுப்பூசி போடுவோருக்கு தங்கப் பஞ்சாயுதம் பரிசு!

சின்னமுத்து நோய்க்கான தடுப்பூசி போடுவோருக்கு தங்கப் பஞ்சாயுதம் வழங்கும் திட்டம் ஒன்றை யாழ் சுகாதாரப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

செப்டெம்பர் 10ஆம் திகதிக்கு முன்னர் சின்னமுத்து நோய்த் தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறும், பரிசுபெறுவதற்கு ஏதுவாகப் பெயர்களைப் பதிந்துகொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இத்திட்டம்பற்றிய விபரங்களை அறிய விரும்புபவர்கள் அவ்வப்பகுதி மருத்துவ மாதர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோருடன் தொடர்பு கொள்ளவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஓ-10)

## ஆவரங்காலில் மோதல்

ஆவரங்காலில் நேற்று மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இரு ஆயுதக் குழுக்களே மோதிக்கொண்டன என்று தெரிவிக்கப்பட்டது.

ஆவரங்கால் சிவன்கோயிலுக்கு அருகில் நடைபெற்ற மோதலை அடுத்து அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. இதனால் யாழ்-பருத்தித்துறை பிரதான வீதியில் சிலமணிநேரம் போக்குவரத்துக்கள் தடைப்பட்டன.

மோதல் சம்பவத்தில் சிலர் காயமடைந்திருக்கலாம் எனக் கூறப்படுகின்றது என்றும் சேதவிவரம் குறித்து ஊர்ஜிதமான தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (ஓ-11)

## நெல்லின் உத்தரவாத விலை விரைவில் உயர்த்தப்படும்

கொழும்பு, ஆக. 24
நெல்லின் உத்தரவாத விலை விரைவில் உயர்த்தப்படவுள்ளதாக விவசாய, உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்திருக்கிறார்.

உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் வரும் நெல் உட்பட்ட சகல உணவுப் பொருள்களுக்கும் வழங்கப்படும் உத்தரவாத விலைகள் அதிகரிக்கப்படவுள்ளன.

விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவே அரசு இந்த நடவடிக்கையை எடுக்கவிருக்கிறது.

அமைச்சர் அத்துலத்முதலி விவசாயத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் மாகாணப் பணிப்பாளர்கள் கலந்துகொண்ட மாநாடு ஒன்றில் பேசுகையில் இத் தகவலை வெளியிட்டார். (ஓ-எ)

## மக்களிடமிருந்து கல்வி பிரியாதிருக்க உதவுங்கள்!

### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 24
தமிழ் மக்களின் பிரிக்க முடியாத சொத்தாகிய கல்வி எம்மிடம் இருந்து பிரிந்துவிடாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டியது சமூகத்தின் கடமையாகும்.

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அறிக்கையின் விவரம் வருமாறு:-

கல்லூரிகள் நடைபெறாது மூடிக்கிடக்கும் இவ்வேளையில்,
(8ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கை — இந்தியப் பேச்சுக்களில்

# பாதுகாப்புக் குழு நியமிப்பது குறித்து கருத்து வேறுபாடு!

## பிரேமதாஸாவின் வற்புறுத்தலுக்கு புதுடில்லி இணங்கி வருமா?

கொழும்பு, ஆகஸ்ட் 24
அமைதிப்படை விலகும் போது அந்த இடங்களில் பாதுகாப்பை மேற்பார்வை செய்ய அமைக்கப்படவிருக்கும் பாதுகாப்புக் குழுவுக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதில் இலங்கை - இந்திய அரசுகளுக்கிடையில் கருத்துவேறுபாடு ஏற்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா மீண்டும் வலியுறுத்தித் தெரிவித்திருக்கும் யோசனைகளுக்கு இந்திய அரசு இணங்கிவருமா என்ற கேள்வி இப்போது எழுந்திருக்கிறது.

அமைதிப்படை விலகும் போது அந்த இடங்களில்பாதுகாப்பை மேற்பார்வை செய்வதற்கும் அதுதொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்கும் பாதுகாப்புக்குழு ஒன்றை நியமிக்க இரு அரசுகளும் புதுடில்லிப் பேச்சுக்களின்போது இணங்கியிருந்தன.

இக்குழுவில் இலங்கை இராணுவத் தளபதி, இந்திய அமைதிப்படைத் தளபதி, பொலிஸ் மாஅதிபர் ஆகியோருடன் வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநரும் இடம்பெறவேண்டும் என்று இலங்கை முதலில் வற்புறுத்தியது.

ஆனால் இந்தியாவோ இக்குழுவில் ஆளுநருக்குப் பதிலாக வடக்கு — கிழக்கு மாகாண முதலமைச்சர் இடம்பெறவேண்டும் என்று வற்புறுத்தியது. குழுவில் நியமிக்கப்படவுள்ள ஏனைய உறுப்பினர்களை இந்தியா ஏற்றது.

இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸ தனது சிறப்புத் தூதர் பிரட்மன் வீரக்கோன்மூலம் புதுடில்லிக்கு அனுப்பிய மீளாய்வு யோசனையில், அந்தக்குழுவில் வடக்கு - கிழக்கு
(8 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அமைதிப்படை துரிதமாக வெளியேற ஏற்பாடு வேண்டும்

### ஜனாதிபதி பிரேமாவின் மாற்று யோசனை

கொழும்பு, ஆக 24
இந்திய அமைதிப்படை இங்கிருந்து துரிதமாக வெளியேற ஒழுங்கு செய்யப்படவேண்டும் என்பதே ஜனாதிபதி பிரேமதாஸாவின் மாற்று யோசனைகளில் முக்கியமானதாகும்.

இதனை அவரே நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

புதுடில்லி யோசனைகளில் மேலும் மாறுதல்கள் தேவை என்று ஜனாதிபதி பிரேமதாசா வலியுறுத்தியுள்ளதாக நேற்றைய உதயனில் முதற்பக்கத் தலைப்புச்செய்தி வெளியானது தெரிந்ததே.

தமது மாற்று யோசனைகள் குறித்து திரு. பிரேமதாச நேற்று உத்தியோகபூர்வமாக ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதன் விவரம் வருமாறு:-

இலங்கையின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத
(8 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானகுழு பிரதிநிதிகள் பற்றி இன்னும் முடிவில்லை

### இலங்கை அரசு அறிவிப்பு

கொழும்பு ஆகஸ்ட் 24
உத்தேச சமாதானக் குழுவில் யார் இடம் பெறுவர் என்பது குறித்து இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என இலங்கை அரசு நேற்று அறிவித்தது.

அந்தக் குழு நியமிக்கப்படும்போது வடக்கு - கிழக்குமாகாணத்தில் உள்ள சகல இனமக்களும் அந்தக்குழுவில் பிரதிநிதித்துவம் பெறுவர் என்றும் அரசு அறிக்கை தெரிவித்தது.

உத்தேசக் குழுவில் சிங்களவர், தமிழர், இந்தியர் மட்டுமே இடம்பெறுவர் என்பது வெறும் ஊகமே என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது. (உ-எ)

## சமாதானக் குழுவில் இடம் முஸ்லிம்களுக்கும் வழங்குக

### அஷ்ரப் ஜனாதிபதிக்கு தந்தி

கொழும்பு, ஆகஸ்ட் 24
அமைதிப்படை விலகல் தொடர்பாக இலங்கை, இந்திய பேச்சுக்களின்போது அமைக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கும் இரண்டாவது குழுவான சமாதானக் கமிட்டியில் முஸ்லிம்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும்.

—இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு அனுப்பிய தந்தி ஒன்றில் வலியுறுத்தியிருக்கிறார்.

தந்தியின் பிரதி பிரதமர் டி. பி. விஜேதுங்காவுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

''பிந்திய தகவல்களின்படி உத்தேச சமதானக் குழுவில் மூன்று சிங்களவர், ஒரு தமிழர், ஓர் இந்தியப் பிரதிநிதி ஆகியோர் இடம்பெறுவர் என்று அறிகிறோம்,
(8ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

(24 - 8 - 1989)
ஆவணி—8 வியாழக்கிழமை
நக்ஷத்திரம்: கார்திகை
சுபநேரம்:
07-35 முதல் 09 55 வரை
சாகுகாலம்:
01-35 முதல் 03-05 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி

## சபாநாயகரின்மெய்க்காவலர் மருதானையில் சுட்டுக்கொலை!

### இன்னும் 8 பொலிஸாரும் பலி!!

கொழும்பு. ஆக. 24
கடந்த 24 மணி நேரத்தில் தென் பகுதியில் ஓர் உயர் பொலிஸ் அதிகாரி உட்பட 32 பேர் கொல்லப்பட்டனர்.

கொழும்பு, மருதானை டீன் வீதியில் வைத்து உதவிப் பொலிஸ் அதிபர் ஏ. விசாகா புதீனை இனந்தெரியதோர் சுட்டுக்கொன்றனர்.

இவர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் சபூரின் சகோதரர் ஆவார். சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகமதுவின் மெய்ப்பாதுகாவலராகக் கடமையாற்றி வந்தார்.

★ மீஹாவதென்ன என்னும் இடத்தில் நேற்று இனந்தெரியாதோர் பொலிஸ் ரோந்துக் குழு ஒன்றை மறைந்து இருந்து தாக்கினர் அப்போது எட்டு பொலிஸார் உயிரிழந்தனர்.

★ அம்பாந்தோட்டையில் ஆறு தீவிரவாத சந்தேக நபர்
(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



நல்லூரிலே பெண் பிரசையன் சமத்துவத்தைக் காட்டிப் போட்டினம் கண்டியளே......!

## நல்லூர் செல்லும் பெண்களே! பெண்களை நம்பாதீர்கள்!!

யாழ்ப்பாணம், ஆக. 24
நல்லூர் ஆலயத்திற்குச் செல்லும் நங்கையரே கவனம்! உங்களோடு அதாவது பெண்களோடு பெண்களாக, பெண் திருடர்கள் ஆலயத்தில் தாராளமாக நடமாடுகிறார்கள்!!

இம்முறை உற்சவ காலத்தில் இதுவரை கிடைத்த திருட்டுக்கள் பற்றிய முறைப்பாடுகளில் பெண்களிடமிருந்து கிடைத்தவையே அதிகம் என்றும் —

அந்தத் திருட்டுக்களை பெண்களே செய்திருக்கிறார்கள் என்றும் — உற்சவகால மாநகரசபை அலுவலகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நகைகளைவிட பெண்களின் பணம், ஏனைய பொருள்கள் என்பனவே இம்முறை கூடுதலாகத் திருட்டுப் போயுள்ளன என்றும் அந்த அதிகாரி மேலும் சொன்னார்.

நல்லூர் செல்லும் பெண்களே! பெண்களை நம்பாதீர்கள்!! (அ-3)

## கண்ணியில் ஜீப் சிதறியது; 6 ராணுவ அதிகாரிகள் பலி!

கொழும்பு, ஆக. 24
தென்பகுதியில் நிலக்கண்ணியில் இராணுவ ஜீப் ஒன்று நேற்று சிக்கியது. அதில் ஆறு இராணுவ அதிகாரிகள் உயிரிழந்தனர் என்று கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மித்திதனியா கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் இராணுவத்தினர் சிலர் காயமடைந்தனர் என்றும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

மொரகெட்டியா கிராமத்தில் ஏற்பட்ட மோதல் ஒன்றில் ஆறு தீவிரவாத சந்தேக நபர்கள் கொலலப்பட்டனர் என்று இவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-எ)

## அளவெட்டி நாராயணர் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 24
அளவெட்டி தெற்கு, ஸ்ரீநாகவரத நாராயணர் ஆலய தேர்த்திருவிழா இன்று சிறப்பாக நடைபெறுகிறது.

இன்று காலை 11 மணிக்கு

(சிறப்பிதழ் 4 ஆம் 5 ஆம் பக்கங்களில்)

நாராயணப் பெருமான தேருக்குஎழுந்தருளித்திரு வீதி
(8 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் [Medical Books] அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் [Latest Computer Books] கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவித மான வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்; மண்டேலா ரேடர் [புத்தகசாலை] இல: 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [1551]

### விற்பனைக்கு

National G1 (Genlock) Panasonic A 2 வீடியோகமரா விற்பனைக்கு உண்டு: பாரத் வீடியோ சென்ரர், 51/1, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்: (1561)

### விற்பனைக்கு

MB - 5 விற்பனைக்கு அல்லது சாளி சைக்கிளுக்கு மாற்றுவதற்கு உண்டு. மோட்டார் சைக்கிளுக்கு வேண்டிய சகல உதிரிப் பாகங்களையும் பெற்றுக் கொள்ளவும்: பாலகிருஷ்ணஸ், மின்சார நிலைய வீதி, [வெலிங்டன் சந்திக்கு அருகில்] யாழ்ப்பாணம்: (1596)

### காணி விற்பனைக்கு

அச்சுவேலி பத்தமேனியில் தென்மூலையில் அர்ச். அந்தோனியார் கோவிலுக்கு பின்புறமாக வீடு கட்டக்கூடிய காணி 2 பரப்பு விற்பனைக்கு உண்டு: தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள், அ: பிரான்சிஸ் சேவியர், 37, பெரிய தம்பனை, மடுக்கோவில் அல்லது. த. முத்தராசா குடியிருப்பு, வவுனியா: (1572)

### கோழிக் குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள் 23 ஆம் திகதி புதன்கிழமையும், Hybro புறொயிலர் குஞ்சுகள் 24 ஆந் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க! சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில்: (1672)

### சோதிடம்

உங்கள் எதிர்காலத்தை உணர்ந்து கொள்ள திருக்கணிதவியல் சோதிட நிபுணர் T. Shanmuganathan, Sempadolai, Emayanan, East Udupiddy. (1584)

### கரும்பு விற்பனைக்கு

நல்லூரில் கரும்பு வியாபார நண்பர்களுக்கு எம்மிடம் நன்கு முற்றிய நல்ல இனச் செங்கரும்பு தொகையாக விற்பனைக்குள்ளது. வைரு பேரம்பலம், தலையாளி, கொக்குவில்: (1691)

### A/L இரசாயன நூல்

ஆசிரியர் சத்தீஸ் அவர்களின் பின்வரும் நூல்கள் வெளியாகி உள்ளன. அடிப்படை இரசாயனம் பகுதி I, அடிப்படை இரசாயனம் பகுதி II, சேதன இரசாயனம் பகுதி II புத்தகசாலைகளில் கிடைக்கும். நேரில் பெறுவோர்க்கு விசேட கழிவு உண்டு. (1668)

### கோழிக் குஞ்சு விநியோகம்

ஹைலைன் (Hyline) சிவப்பு. கறுப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் புள்ளிக் கறுப்பு சேவல் புறொயிலர் ஆகிய குஞ்சுகள் 29 8 89 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. S.T.R. அன் சன் மால்கடை, திருநெல்வேலி சந்தி (1693)

### கோழிக் குஞ்சு விநியோகம்

பிறிமா உத்தரவாதம் உடைய ஒருநாள் லோமன் இன புறொய்லர் குஞ்சுகள் ரூபா 15/50, வெள்ளை ரூபா 16/00 பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 13/50, ஒவ்வொரு வாரமும் வழங்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க கால்நடை உணவுகளுக்குமெம்மை நாடுங்கள், ஸ்ரீ கிருஷ்ணா ஒயில் ஸ்ரோர்ஸ் 802, பலாலிவீதி, திருநெல்வேலிச் சந்தி. (1372)

### தேவை

Lister Engine எந்த நிலையிலும் உடன் தேவை: தொடர்பு: விஜயன், 11/5, செம்மண் வீதி, (சாமுவேல் & சன்ஸ் அருகாமையிலுள்ள ஒழுங்கையில்) முத்திரைச் சந்தி, நல்லூர்: (1567)

நன்கு அனுபவம் உள்ள சமையல் வேலை செய்யக்கூடியவர்களும், சப்ளை செய்யக் கூடியவர்களும் தேவை: மலையகத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் விரும்பத்தக்கது. நேரில் வரவும் கோட்டல் ஜேலக்ஸ் 840, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்: (1656)

### தாதி பயிலுனர்

அண்மையில் விஸ்தரிக்கப்பட்டுள்ள Medical Clinic இற்கு தாதி பயிலுனர் தேவை: 3 மைல் சுற்றுடலில் உள்ளோருக்கு முன்னுரிமை. தொடர்பு: Mrs J. சொர்ணலிங்கம் Medical Clinic, மூளாய் ரோட், வட்டுக்கோட்டை (1687)

### மீண்டும் விற்பனையாகிறது

ஜெயகாந்தனின் சில நேரங்களில் சிலமனிதர்கள், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் ஜெகசிற்பியனின் கடைசி நாவல் ஆருவது தாகம், சாண்டில்யனின் அவனி சுந்தரி - ராஜன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (1681)

### ஜெனரேட்டர்

2 K V இலிருந்து 5 K V வரை திறனுடைய ஜெனரேட்டர் வாடகைக்கு அல்லது விலைக்குத் தேவைப்படுகின்றது: தொடர்பு: ராம்சன்ஸ் பிரயாணப் பொருள்கள் தொழிலகம், சுதுமலை வடக்கு, மானிப்பாய்: (1695)

### வகுப்புக்கள்

தமிழ் ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்து வகுப்புகள் S.T.C.A சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் 77இல் நிறுவப்பட்டது அரச பதிவிலக்கம் 12442. திட்ட அமுலாக்கல் அமைச்சினாலும் லண்டன் பிற்மன் பரீட்சை நிறுவனத்தாலும் அங்கீகரிக்கப்பட்டது. S.T.C.A தராதரப் பத்திரம் பரவலாக அங்கீகரிக்கப்படுகிறது: (1699)

### வகுப்புகள்

Office Practice Accounts, English புதிய வகுப்புகள் ஆரம்பம்: மூன்று பாடங்களும் சேர்ந்து ரூபா 50/- மாதாந்தம்; ஆங்கில மொழி மூலம் தமிழ் விளக்கம். ஆங்கில அறிவை விருத்தி செய்யும். ACMA லண்டன் தேர்ச்சி விரிவுரையாளர்: S.T.C.A சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்: (1698)

### பரீட்சைகள்

பிற்மன் லண்டன் பரீட்சைகள் சுருக்கெழுத்து தட்டெழுத்து மற்றும் பாடங்களில் 2-4-89இல் 20-8-89இல் நடைபெற்றன; 3ஆவது தடவையாக டிசெம்பரில் நடைபெறும். விண்ணப்ப முடிவு திகதி 30-9-89. வெளிமாணவரும் தோற்றலாம். S.T.C.A. சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்: (1697)

### A/L இரசாயனம்

108 Brown Road A/L 90, A/L 91 இரசாயன வகுப்புக்கள் ஆசிரியர்; சத்தீஸ், ஆரம்பம்: 25 08 89 வெள்ளி முதல். (1702)

## கண்காட்சி

யாழ் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவின் விற்பனைக் கண்காட்சி ஒன்று தற்பொழுது நல்லூரில் நடைபெறுகிறது.

மின் உபகரணங்கள், மட்டைப் பிடித் தயாரிப்புகள்... (partial) விளையாட்டு பொருள்கள், பனம்பொருள் உற்பத்திகள், தைத்த ஆடைகள், கைப்பணிப் பொருள்கள், உணவுப்பண்டங்கள் போன்ற பல்வேறு வகையான பொருள்கள் இந்த விற்பனைக் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன (இ - 6)

# முல்லைத்தீவு உ. அ. அதிபர் பிரிவிலும் ஜனசக்தி திட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜனசக்தி அமுலாக்கப்படும் உதவி அரசாங்க அதிபர் பிரிவாக முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு வி. கந்தசாமி தெரிவித்தார்.

மேலும் செப்டம்பர் 15 ஆம் திகதி முதல் ஜனசக்தித் திட்டத்தின் கீழ் கார்ட்டுகள் வழங்கப்படும்என்றும் அதற்கான சகல ஏற்பாடுகளையும் கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஜனசக்திக் குழுக்கள் மூலம் எடுத்துவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-92)

# பதற்ற நிலை காரணமாக குதிரைப் பந்தயம் ரத்து!

தென்பகுதியில் நிலவும் பதற்ற நிலைமை காரணமாக நுவரெலியாவில் இம்மாதம் நடத்தப்பட இருந்த குதிரைப் பந்தயங்களை, இலங்கை குதிரைப்பந்தய சங்கம் காலவரையறையின்றி ஒத்திவைத்திருக்கிறது.

23 ஆண்டுகளுக்கு பின்னர் பெரிய அளவில் குதிரைப்பந்தயங்களை இந்த ஆண்டில் நடத்தவும் அதற்காக பந்தயக் குதிரைகளை இறக்குமதி செய்யவும் குதிரைப்பந்தய ரசிகர்கள் ஏற்பாடுசெய்தனர்.

பதற்ற நிலை காரணமாக அனைத்து ஏற்பாடுகளும் கைவிடப்பட்டன; (ஒ-எ)

# மானிப்பாய் வங்கியின் பொன்விழா

யாழ்ப்பாணம் ஆக 24

இலங்கை வங்கியின் பொன்விழா, இலங்கைவங்கி மானிப்பாய்க் கிளையில் அதன் முகாமையாளர்திரு கி என் நவரட்ணராஜா தலைமையில் நடைபெற்றது

மானிப்பாய் கிறிஸ்தவ சங்கத் தலைவரும் பிரஜைகள் குழுத் தலைவருமான திரு. டபிள்யூ. ஜி. அன்னப்பா பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இந் நிகழ்ச்சிக்கு பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர்களும் ஏராளமான பொதுமக்களும் சமுகமளித்திருந்தனர்.

இந் நிகழ்ச்சியில் வழக்கறிஞர் வசந்த சேனன், இளைப்பாறிய வங்கி உத்தியோகத்தர் தருமலிங்கம் வங்கிஊழியர் ஸ்ரீ பாஸ்கரன் ஆகியோரும் உரையாற்றினர்கள்.


# 'M' THREE TRAVEL

வழங்கும்

## சவூதி அரேபியா, மாலைதீவு - பிரயாணம்

### ★ சவூதி அரேபியா

| | | | |
|---|---|---|---|
| 1. A. C. TECHNICIAN | — 2 | வெற்றிடம் | 750 SR |
| 2. AUTO ELECTRICIAN | — 1 | ,, | 750 SR |
| 3. CAR HOOD REPAIRING [கார் கூட் திருத்துபவர்கள்] | — 2 | ,, | 550 SR |

### ★ மாலைதீவு - பெண்கள் மட்டும்

| | | | |
|---|---|---|---|
| 1. DOCTOR OR R. M. P [FEMALE / MALE] | இவர்களது சம்பளம் நேர்முகப் பரீட்சையில் தீர்மானிக்கப்படும். | | |
| 2. SUPERVISOR | | | |
| 3. TAILORS | — 10 | வெற்றிடம் | 85 USD |
| 4. HELPERS | — 10 | ,, | 70 USD |

Campany முகவர் (திரு. R. பாலசுப்பிரமணியம்) தற்போது கொழும்பில் நிற்கின்றார்.

செப்ரெம்பர் 15 ஆம் திகதி பிரயாணம்.

● நேர்முகப் பரீட்சையில் தெரிவானோர பிரயாணம் செய்யலாம். இவற்றிற்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

## 'M' THREE TRAVEL

தலைமையலுவலகம்:
"இந்திரபவனம்"
சோதி வீதி,
காங்கேசன்துறை.

கிளையலுவலகம்:
இல. 1, 2 ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி 3546]


# நினைவு அஞ்சலி





திருமதி
பரிமளம் பொன்னையா

அன்னைமடியில்: 27 - 11 - 1926
ஆண்டவன் அடியில்: 29 7 1979

திரு
பொன் செல்வராஜா

அன்னைமடியில்: 30 - 3 - 1950
ஆண்டன் அடியில்: 3 - 9 - 1988

திதி: 24 - 8 - 1989

குடும்ப தீபங்களே அன்புத் தெய்வங்களே
எங்களை ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்றுவிட்டீர்களே!
எங்கள் உள்ளத்துடிப்பு உள்ளவரை உங்களை மறவோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கின்றோம்;

புன்னாலைக்கட்டுவன் வடக்கு. (1705) — குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தேவை

சவோய் டூறிஸ்ட் ஹோட்டலிற்கு சமையற்காரர் ஒருவரும், உதவியாளர் ஒருவரும் உடனடியாகத் தேவை. நேரில் வரவும்.

சவோய் டூறிஸ்ட் ஹோட்டல்,
கீரிமலை வீதி, காங்கேசன்துறை.
(K. K. S. சந்தியில் இருந்து 400 m தூரம்)
(1708)



## அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

## பகிரங்க ஏலவிற்பனை

எமது யாழ்ப்பாணம் மரக்காலையில் உள்ள ஏழு (07) மலை வேம்புக் குற்றி மரங்கள் (Mahogauy Logs) 121 கன அடி 1989 - 09 - 15 ஆந்திகதி வெள்ளிக்கிழமை காலை 10: 00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் என்னால் விற்பனை செய்யப்படும். ஏலத்தில் வாங்க விரும்புவோர் ஏலத்தில் விடப்படும் மரங்களை முற்கூட்டியே பார்வை இடலாம். மேலதிக விபரங்களுக்கு யாழ்ப்பாணம், மரக்காலைப் பொறுப்பதிகாரியுடனோ அல்லது எம்முடனோ தொடர்பு கொள்ளவும்.

பிரதேச முகாமையாளர் வடபிராந்தியம்.
அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்.
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/3548)



# வெளிநாட்டுப் பயணம்

## உடனடிப் பிரயாணம்

### ● கிறீக் கப்பல்கள் 2

| | | |
|---|---|---|
| A.B | 3+3 | வெற்றிடங்கள் |
| OILER | 3+3 | ,, |
| FRESHER | 5+5 | ,, |

முதலில் விண்ணப்பித்தவர்களும் PASS PORT & WAGES PAPER அல்லது G.D G + 4 படங்களுடன் நேரில் வரவும்

### ● LIBYA (லிபியா)

25 வயதிற்குமேல்
Labourer — 10 ஆட்கள்
சம்பளம் 13,000 00
Passport + 6 படங்கள்

### ● சிங்கப்பூர் (SINGAPORE)

தாதிமார் (Nurse)
27 ஆம் 28 ஆம் 29 ஆம் திகதிகளில் நேரில் சந்திக்கவும்
★ PASSPORT & BOND உடன் செய்து கொடுக்கப்படும்.

க. இந்திரலிங்கம்

## நிரோஷன் என்ரபிறைசஸ்

பருத்தித்துறை வீதி, மயிலிட்டி.
காங்கேசன்துறை.
(T.B. வைத்தியசாலை அருகில்)
(1703)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு:
22 - 02 - 1923

உதிர்வு:
25 - 07 - 1989

அமரர்

## இன்னாசிமுத்து சூசைப்பிள்ளை

திங்களொன்று சென்றதையா தேற முடியவில்லை
எங்கள் குலக்கொழுந்தாய் ஏந்தலாய்
எல்லோருக்கும் அன்பு செறிந்து ஆற்றுப் படுத்திய
நெஞ்சங்கள் உள்ளவரை நினைந்துருகி வாடிநிற்கும்

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்;

பெரியபுலம் வீதி,
நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை;
(1704)

## பொய்யாமொழி

குறள்:

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி.

பொருள்:

முயற்சி, நிறைந்த அறிவு என்று சொல்லப்படும் இரண்டினையும் உடைய இடைவிடாத செயலால் ஒருவனுடைய குடி உயர்ந்து விளங்கும்.

உதயன்

இல. 392/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்: தொலைபேசி 24604 / 23078

24 - 08 1989 த. பெ. இல: 11

# நம்பிக்கை தரவில்லையே!

தென்னிலங்கை நிலைமை, நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிறது:

அரசியலில் எப்போது, என்ன நடக்குமோ என்று அச்சப்படும் அளவுக்கு, ஊகித்துச் சொல்ல முடியாத அளவுக்கு நிலைமை நெருக்கம் கண்டுள்ளது.

மக்களின் நாளாந்த இயல்பு வாழ்க்கை பல வகைகளாலும் பாதிப்படைந்துள்ளது: பல கோணங்களாலும், பல துறைகளாலும், நொய்ந்து போயுள்ளது:

இந்த இரண்டு வகை நெருக்கடிகளையும் நீக்கி அவற்றில் இருந்து மீட்சி பெற இயலாமல் அரசாங்கம் திணறுகிறது. இந்த அமுக்கங்களிலிருந்து விடுபடுவதற்குப் பலவித முயற்சிகளையும் மேற்கொள்வதாக அது காட்டிக் கொள்கிறது. பலவித யோசனைகளையும், கருத்துக்களையும் மாறி மாறி முன்வைக்கிறது:

ஆனால் அரசியல் விவகாரமும் மக்களுக்கு உள்ள பாதிப்பும் மேலும் சீர்கெடுகின்றனவே அன்றி சிறிதளவு முன்னேற்றத்தைத் தானும் காண முடியவில்லை. அதற்குரிய அறிகுறியேனும் தென்படவில்லை:

அரசுத் தலைமைப் பீடம் தனது வழிப்பட, தனது எண்ணப் போக்கில் எல்லாத் தரப்புகள் மூலமும், நெருக்கடியைத் தவிர்க்க, நிலைமையைச் சீராக்க அவசர அவசரமாகச் செயற்படுவதாகவே வெளித் தோற்றத்துக்குத் தெரிகிறது.

பல முனைகளுடனும் தொடர்பு கொண்டு, பேச்சு நடத்தி நெருக்கடியை நீக்க முயல்வதாகவே தெரிகிறது: சகல அரசியல் கட்சிகளின் யோசனைகளையும் பெறுவது, சில நிபந்தனைகளுக்கு இணங்க முன் வருவது போன்ற நடவடிக்கைகள் அப்படி ஒரு மாயையை மக்களிடம் தோற்றுவிக்கின்றன.

ஆனால் அரசு தனது கௌரவத்தையும்: அதிகாரத்தனத்தையும் விட்டுக் கொடுப்பதாகத் தெரியவில்லை. சொல்லிலும் செயலிலும் முரண்பாடாக நடந்து கொள்கிறது.

நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காக, நாடாளுமன்றத்தைக் கலைத்து, அரசியல் நிர்ணய சபையை நிறுவத் தயாராக இருப்பதாகக் கூறும் அரச தலைமைப்பீடம்—

தீவிரவாதிகள் தாக்குதல்களை நிறுத்தும் வரை இராணுவ நடவடிக்கைகள் தொடரும் — என்றும் கூறுகிறது:

இந்த விட்டுக் கொடுக்க முன்வராத நிலைப்பாடு முரண்பாட்டு நிலையைத் தோற்றுவிக்கிறது: அடுத்த பக்கத்தில் உள்ளவர்களை முரண்டு செய்யத் தூண்டுகிறது. அல்லவா?

அரசாங்கமும் தன்னைத் தீவிரவாதிகளுடன் ஒரே தட்டில் வைத்து எடை போட எண்ணக் கூடாது: மக்களுக்குப் பாதுகாப்பு, அமைதி, இயல்பு வாழ்க்கை என்பவற்றைத் தேடிக் கொடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. அது மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமையும் ஆகும்.

இதனை உணராது தீவிரவாத சக்திகளுடன் ஒரே கோட்டில் நின்று, குட்டினால் தட்டும் (Tit For Tat) கோட்பாட்டை அரசாங்கம் கையாளக்கூடாது. மக்கள் நலனை முன்னிறுத்தி, விட்டுக் கொடுக்கும் தன்மையை உள்ளார்த்தமாகச் செயற்படுத்த வேண்டும். நெருக்கடியைத் தளர்த்த இது அடிப்படைத் தேவை என்பதை அரசு மறந்து போனது பெரும் துரதிர்ஷ்டமே!

மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் களைய, நெருக்கடியை நீக்கத் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று உள்ளார்த்தமாகச் செயற்படும் நோக்கம் எதிரணியினரிடமும் இல்லை. அவர்களது பேச்சும் செயலும் அதனையே புலப்படுத்துகின்றன:

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளும் நோக்கத்துடன், இப்போதைய ஆட்சியை அகற்றிவிட வேண்டும் என்ற உள்நோக்கமே அவர்கள் சொல்லிலும், செயலிலும் தொக்கு நிற்கின்றன. குழம்பிய குட்டையை மேலும் கலக்கி மீன் பிடிக்கப் பார்க்கும் முயற்சிகளையே அவை தோட்டுக் காட்டுகின்றன:

அரசினதும், எதிரணியினரதும் நோக்கங்கள் மக்கள் நலனை நாடியவையாகத் தெரியவில்லை. இருசாராருமே இதய சுத்தியுடன் செயற்படவில்லை: இவையே தென்னிலங்கையின் இன்றைய உண்மை நிலை.

ஆகவே தெற்கில் நெருக்கடியும், பாதிப்புகளும் தளர்ந்துவிடும் என்று எண்ணுவதற்கு எவ்வித நம்பிக்கையும் கொள்ள இடமில்லை.

## தொல்லை வினை தீர்ப்பாய்!

குன்றமதில் மீதமர்ந்து குவலயத்தைக் காப்பாய்
குறமகளாம் வள்ளியுடன் குடிகொண்டு அருள்வாய்
அண்டமெங்கும் அருள்சிறக்க அவனியிலே வருவாய்
ஆறுமுக வேலவனே அடியவரைக் காப்பாய்
நல்லையிலே வீற்றிருந்து தொல்லைவினை தீர்ப்பாய்
நாவினிலே மீதுறைந்து பாமலராய் மலர்வாய்
புள்ளிமயில் வாகனனே அள்ளியருள் புரிவாய்
பூமியெங்கும் நல்லமைதி ஓங்கிடவே அருள்வாய்!

அரியாலையூர் ஐ. குமரதாசன்

(இன்று நல்லைக் கந்தன் 19 ஆம் திருவிழா)

# பாடசாலைகளுக்கு உணவு தயாரிக்கும் சமையல் பாத்திரங்கள்

## கல்வித் திணைக்களம் நடவடிக்கை

மானிப்பாய் ஆக: 24

மதிய உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு உணவு தயாரிக்கும் சமையல் பாத்திரங்களை பாடசாலைகளுக்கு வழங்குவதற்கு மாகாண மட்டத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது:

யாழ்ப்பாணம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி இதனைத் தெரிவித்துள்ளார்:

பாடசாலைப் பிள்ளைகளுக்கு நிறை உணவு வழங்கப்படுவது அவசியம். சில பாடசாலைகளில் நிறை உணவற்ற பணிஸ், பிஸ்கட், தேநீர் போன்றவையே வழங்கப்பட்டு வருகின்றன:

இவற்றை விடுத்து பூரண சத்துணவாக சோறும் கறியும் வழங்கப்படுதல் அவசியம்:

பாடசாலைகளில் சோறும் கறியும் மாணவர்களுக்கு வழங்குவதற்கு வடக்குக் கிழக்கு மாகாண அரசு கொள்கை அளவிலான தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளதாக வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சுச் செயலாளர் அறிவித்துள்ளார்:

பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் தேவையான சமையல் பாத்திரங்கள் பற்றிய விபரங்களைத் தமக்கு அறிவிக்குமாறு யாழ்ப்பாணப் பாடசாலை அதிபர்களை சுற்று நிருபம் மூலம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (இ-90)

வவுனியா - டிப்ளோமா

## விவசாயக் கல்லூரிக்கு 40 மாணவர் தெரிவாவர்

யாழ்ப்பாணம், ஆக. 24

வவுனியாவில் ஆரம்பிக்கப்பட உள்ள விவசாய டிப்ளோமா கல்லூரியின் இவ்வருட பயிற்சி நெறிக்கு 40 மாணவர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர். அடுத்த மாதம் இது ஆரம்பிக்கப்பட உள்ளது.

ஜி. சி. ஈ உயர்தர வகுப்பில் விஞ்ஞானப் பாடத்தில் நான்கு பாடங்களில் சித்தி பெற்றவர்களே இந்த இரு வருட பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

இவ்வாண்டு 40 மாணவர்கள் மட்டும் பயிற்சியில் ஈடுபடுத்தப்படுவர். ஆயினும் எதிர்காலத்தில் கல்லூரியின் வளங்கள் சீராக்கப்பட்டதும் வருடந்தோறும் 100 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

அத்துடன் பிரஸ்தாப கல்லூரியின் கற்கை நெறிகளுக்கு வடக்கு - கிழக்கு மாகாண மாணவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும்:

இதுவரை குண்டசாலையில் மட்டுமே நடாத்தப்பட்டு வந்த விவசாய டிப்ளோமா பயிற்சிநெறி முதன் முறையாக வவுனியாவில் ஆரம்பிக்கப்பட உள்ளது. ஆயினும் குண்டசாலை விவசாயப் பாடசாலையில் இல்லாத கற்கை நெறிகளான வனவளம் மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு என்பனவும் இங்கு சேர்த்துக் கொள்ளப்பட உள்ளன. (-9)

## சென்ஜோன் அம்புலன்ஸ் சேவை

யாழ்ப்பாணம் ஆக. 24

இன்று நடைபெறும்பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமான் கோவில் தேர் உற்சவத்தின் போது 85 பேரைக் கொண்ட சென்ஜோன் அம்புலன்ஸ் படையினர் சேவை ஆற்றுவார்கள்;

இதற்கு நல்லூர் படை நிறைவேற்று உத்தியோகத்தர் திரு: ஏ. கிருஷ்ணராஜா பொறுப்பாக இருப்பார்.

தற்போது நல்லூர் கந்தன் ஆலயத்தில் சென் ஜோன் அம்புலன்ஸ் படையினர் சிறந்தமுறையில்சேவைஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது: [இ]

## பின்போடப்பட்டது

வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் இன்று வியாழன் காலை 7 - 00 மணிக்கு நடைபெற இருந்த பகவத்கீதை ஹோமம் பின்போடப்பட்டுள்ளது:

கிருஷ்ணஜெயந்தி உற்சவம் மாலை 5 - மணிக்கு அறிவித்தலின்படி நடைபெறும். (இ)

## வாசகர் திருமுகம்

### விசர்நாய்க்கடி

சமீபத்தில் யாழ்: மாவட்டத்தில் விசர்நாய் கடிக்கு உள்ளானோர் சிகிச்சையைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர்: யாழ்: போதனா வைத்தியசாலையில் இந்நோயாளர்க்குரிய ஊசி மருந்து தட்டுப்பாடாகவுள்ளது: நாள்தோறும் நோயாளர்கள் வைத்தியசாலைக்குச் சென்று நெடுநேரம் காத்திருந்து சிகிச்சையைப் பெறமுடியாது ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது:

விசர்நாய்க்கடியின் விளைவாக ஏற்படும் விபரீத தாக்கங்களை நன்கறிந்த சுகாதாரப் பகுதியினர் இவ்விடயத்தில் அசமந்த போக்கினைக் கடைப்பிடிப்பது பெரும் வியப்பையும் வேதனையையும் ஏற்படுத்துகின்றது:

மேலைத்தேய நாடுகளில் கால்நடைகளுக்கே உரிய சிகிச்சை அளிக்கப்படும்பொழுது நம்நாட்டில் பெறுமதிமிக்க மானிட உயிர்களுக்குச் சாதாரண சிகிச்சையினைப் பெற்றுக் கொள்வதே முயற்கொம்பாக அமைகின்றது. தத்துவமேதை இராதாகிருஷ்ணன் கூறிய பிரகாரம் மனிதனுக்கு மனிதனைவிட மேலான முக்கிய பொருள் யாதொன்றுமில்லை. (Nothing is so important to man as man):

விசர்நாய்களின் தொல்லையை நீக்குவதில் சுகாதாரப் பகுதியினரும் உள்ளூராட்சி மன்றங்களும் ஒருங்கிணைந்து செயற்படல் இன்றியமையாததாகும்:

ஞா. நிவேதனு
சாவகச்சேரி:

### பாண் நிறை

தற்பொழுது விற்பனையாகும் பாணின் 1 இறாத்தலுக்கென நிர்ணயிக்கப்பட்ட நிறை இல்லை:

விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்து தற்போது யாழ்ப்பாணத்தில் 3: 75 சதம்வரை பாண் விற்கப்படுகிறது:

முன்பு இப்படியான நிறை குறைந்த பாணையும் மற்றும் பல பொருள்களையும் விற்பவர்களை அடிக்கடி அதிகாரிகள் திடீர் பரிசோதனைகள்மூலம் கண்டுபிடித்து வந்தனர்: ஆனால் இப்போது அப்படி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை:

எனவே அதிகாரிகள் இது விடயத்தில் கவனமெடுத்து இந்த ஏமாற்று நடவடிக்கையில் ஈடுபடுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் சார்பில் வேண்டுகின்றேன்:

இ. வீரசிங்கம்
வல்வெட்டி:

# கால்நடை நோய் மீண்டும் பரவுவதைத் தடுக்க தடுப்பூசி

## வளர்ப்பாளர்களுக்கு ஆலோசனை

காங்கேசன்துறை ஆக 24

''மாடுகளைத் தாக்கும் காலவாய் தொண்டை அடைப்பான் கோமாரி போன்ற நோய்கள் குறித்து மக்கள் அவதானதாக இருக்க வேண்டும். இன்றேல் இந்நோய்கள் மீண்டும் அபாயகரமாக உருவெடுத்து மாடுகள் பெருமளவில் இறக்க வழிஏற்படும்:

ஆகவே தடுப்பூசிகளை ஏற்றி உரிய தடுப்பு முறைகளைப்பின் பற்றி மாடுகளை அழிவிலிருந்து காப்பாற்றவேண்டும்.

தெல்லிப்பளை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மைக் காலமாக மாடுகளுக்கு பயங்கர நோய்கள் ஏற்பட்டு ஏராளமான மாடுகள் இறக்க நேரிட்டன: தடுப்பு நடவடிக்கைகளால் இவற்றை ஓரளவு தடுக்க முடிந்தது. தொடர்ந்தும் இது விடயத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

வலி வடக்கில் பலாலி, மயிலிட்டி, வயாவிளான், கீரிமலை பன்னாலைப்பகுதிகளில இருந்து மேய்ச்சலுக்காகவும் எருவுக்காகவும் தோட்டம் செய்யும் நோக்கத்திற்காகவும் மாடுகளை வரணி கரைச்சி, கண்டாவளை மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் அனுப்புவதாக மாட்டுச்சொந்தக்காரர்கள் அறிவிக்கிறார்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளிலும் வரணிப் பகுதியிலும் கோமாரி நோய் காணப்படுவதால் இப்பகுதிகளுக்கு வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து மாடுகளை அனுப்பி உள்ளவர்கள் இம் மாடுகளை மீண்டும் தமது வீட்டுக்கோ அல்லது தோட்டத்துக்கோ கொண்டுவரும் போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்:

இப்படி அறிக்கையில்கோரப்பட்டுள்ளது, [இ-68

கரவெட்டிப் பகுதி

## மாணவருக்கு

கரவெட்டி ஆக. 24

கரவெட்டிப் பகுதியில் ஜி. சி. ஈ: சாதரணதாரப் பரீட்சைக்கு மூதலாம்முறை இரண்டாம் முறை தோற்றும் மாணவர்கள் இன்று வெள்ளிக்கிழமைக்கு முன்னத்தமது பாடசாலை அலுவலகங்களுக்கு வந்து பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும்:

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற அதிபர்களின் கூட்டத்தில் இப்படித் தீர்மானிக்கப்பட்டது: (க - 70)

## சமய சந்நிதியில்

### மடத்து பிள்ளையார் கோவிலில்

சுழிபுரம், ஆக 24

தொல்புரம் மடத்துப்பிள்ளையார் ஆலயவருடாந்த மகோற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது:

பத்தாவது நாள் தேர்த்திருவிழா நடைபெற்று உற்சவம் தீர்த்தத் திருவிழாவுடன் முடிவடையும்:

தேர்த்திருவிழா அன்று சங்காபிஷேகம் நடைபெற்று பிள்ளையார் முருகன் தேர்களில் வீதிவலம் வருவார்:

### நீராவியடி கடையிற்சுவாமி ஆலயத்தில்

யாழ்ப்பாணம் ஆக, 24

யாழ் நீராவியடி கடையிற் சுவாமி சமாதிச்சிவாலய தேவஸ்தானத்தின் அலங்கார உற்சவ இலட்சார்ச்சனையும் ஹோமமும் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறும்:

3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மகாசங்காபிஷேகம் நடைபெறும்: அன்றைய தினம் மாலை திருக்கல்யாண வைபவம் இடம்பெறும்:

24 ஆம் திகதியிலிருந்து2ஆம் திகதி வரை தினமும் பலவேறு கல்வி மான்களின் சொற்பொழிவுகள் இடம்பெறும். (இ - 6)

### நாராயண சுவாமி கோயிலில்

காங்கேசன்துறை ஆக. 24

கீரிமலை ஸ்ரீமத் நாராயண சுவாமி தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முதல் நடைபெறவிருக்கிறது:

தொடர்ந்து பதினொரு தினங்கள் உற்சவம் நடைபெற்று அடுத்த மாதம்ஐந்தாம் திகதி சங்காபிஷேகமும், திருக்கலியாண வைபவமும் நடைபெற உள்ளன.

இன்று மாலை மூன்று மணிக்கு ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி உற்சவமும் நடைபெறவிருக்கிறது: (இ - 68)

வடபகுதியில்

## வீடமைப்புவேலை ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஆக 24

அரசின் 'செவனகரள' வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கிராமிய நகர, வீடமைப்பு வேலைகள் சீமெந்து விநியோக இடைநிறுத்தம் காரணமாக பாதிப்பு அடைந்துள்ளன

இத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வரும் வீடமைப்பு வேலைகளின் இறுதிக் கட்டத்தை இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி செய்து இறுதிக் கட்டக் கொடுப்பனவுகளை வழங்க வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை துரித முயற்சியை எடுத்துள்ள போது சீமெந்து விநியோகம் நிறுத்தப்பட்டது. வீடமைப்பு வேலைகளையே ஸ்தம்பிதமடையச் செய்து விட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதே போல் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் வீடமைப்பு வேலைகளும், மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி சபையின் கடன் மூலம் அமைக்கப்பட்டு வரும் வீடமைப்பு வேலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன: என்று வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (க-13)

## மினிபஸ்சேவை அலுவலகம்

யாழ்ப்பாணம் ஆக. 24

வடபிராந்திய மினிபஸ் சேவைச்சங்கங்களின் சமாசம் தனது பூநகரி பஞ்சாயத்து சபைக்கு புதிய அலுவலகம் ஒன்றை திறக்க உள்ளது.

இந்தத் அலுவலகம் எதிர்வரும் 26 ஆம திகதி சனிக்கிழமை காலை 10 மணி அளவில் திறந்து வைக்கப்படும்.

பூநகரி -மன்னார் வீதிச் சந்தியில் அமைந்துள்ள பிரஸ்தாப அலுவலகத்தை வ.பி.மி சேவைச் சங்கங்களின் சமாசத் தலைவர் திரு பொன்: மதிமுகராஜா திறந்து வைக்கவுள்ளார். (இ - 9)

## பாதுகாப்பு அரண் அகற்றப்பட்டது

குருநகர், ஆக 24

குருநகர், இறங்குதுறையில் இருந்து வந்த அமைதிப்படையின் பாதுகாப்பு அரண் நேற்றுக் காலை அகற்றப்பட்டது.

கடந்த இரண்டு வருடங்களாக இங்கு பாதுகாப்பு அரண் இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது; (ஒ-51)

கிராமசேவையாளர்

# இட மாற்றத்தால் பொதுமக்கள் அவதி

மன்னார், ஆக 24

அண்மையில் மன்னார் மாவட்டத்திலுள்ள கிராம சேவையாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதால் மன்னாரில் உள்ள மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.

புனர்வாழ்வு [illegible] பாதிக்கப்பட்டவர்களின் [illegible] முறைப்பாட்டுப் பிரதிகள், உணவு முத்திரைகள் மாற்றம், ஜனசக்தி போன்றவேலைகள் பூர்த்தியாகாத நிலையில் இந்த இடமாற்றம் நடைபெற்றதால் மக்கள் புதியவர்களிடம் சென்று தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் காலதாமதம் ஏற்படுகின்றது [illegible] படுகின்றது: (உ-க-ரி)

## கண்டதும் கேட்டதும்

யாழ்ப்பாணத்தில் தற்போது சுறுசுறுப்பாக நடைபெறும் வியாபாரங்களில் விண்ணப்பப்படிவ விற்பனையும் ஒன்று;

ஏதாவது ஒருபதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்ட மறுதினமே மாதிரிப் படிவங்கள் விற்பனைக்கு வந்து விடுகின்றன: மக்கள் நான் முந்தி நீ முந்தி என்று இவற்றை வாங்குவதையும் காணக்கூடியதாக இருக்கிறது. நமது சமுதாயத்தில் விண்ணப்பப்படிவங்களைத் தாமே தயாரிக்கத் தெரியாதோர் ஏராளமானோர் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் இந்த வியாபாரம் நடைபெற்றாலும் இப்படியானவர்களுக்கு இதனை ஓர் உதவியாகவும் கொள்ளலாம்:

ஆனால் எதிலும் ஓர் அளவு நியாய சிந்தை தேவை என்று எமது வாசகர் ஒருவர் எழுதுகிறார்:

யாழ் கச்சேரியடியில் விற்பனையாகும் வாகனப் பாஸ் விண்ணப்பப்படிவங்கள் பற்றியே அவர் குறிப்பிடுகிறார்.

ஒரு கடையில் 1 ரூபா 50 சதமாகவும் இன்னும் ஒரு கடையில் 2,00 ரூபாவாகவும் மற்றும் ஒரு கடையில் 2 ரூபா 50 சதமாகவும் வாகனப் பாஸ் விண்ணப்பப்படிவங்கள் விற்கப்படுகின்றனவாம்.

இதற்குப் பெயர்தான் என்ன?

—செய்திலோலன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அளவெட்டி தெற்கு ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலய ரதோற்சவ மலர்

அளவை அமர்ந்தருள் பாலிக்கும்
அண்ணல் நாராயணன் தேருர்க!
அன்பளிப்புப் பொருட்கள், கோல்ட்கவறிங் நகைகள்,
விளையாட்டுப் பொருட்களுக்கு

★ அம்பிகாபதி ★
பான்ஸி குட்ஸ்

66, பெரியகடை. யாழ்ப்பாணம்.

அளவை ஸ்ரீ நாகவரத நாராயணர்
நாமம் அகிலமெலாம் மிளிர்வதாக
★ ஆங்கில மருந்து வகைகள்
★ பால்மா வகைகளைப் பெற

★ றெஜின் பார்மஸி ★
அன் குறேசறி
12, சின்னக்கடை வீதி. குருநகர்.

காசினியில் கவலைகள் நிறைந்ததையா
காத்திடும் ஸ்ரீ நாகவரத நாராயணரே!
மளிகைப் பொருட்களை மலிவாக வாங்க
நாட வேண்டிய இடம்!

ந. த. இராசரெத்தினம்
(பலசரக்கு வியாபாரம்)
1, 2, நவீன சந்தை, சங்கானை.

பார்போற்றும் ஸ்ரீ நாகவரதனுர்
தேர்வீதியுலா இன்று தென் அளவையில்!
இரும்புப் பொருட்கள், கம்பி, ஆணி வகைகளுக்கு

★ சுந்தரன் ★
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
30, கே. கே. எஸ். வீதி சுன்னுகம்.

அளவையூர் அருட்கவி நேசனே
அன்பர்க்கு கீதாபதேச தேசனே!
★ சன்குண ★
ஸ்ரேசன் வீதி, சுன்னுகம்.

தம்பிரான் தங்கரதமேறி இன்று
தந்திடுவான் திருக்கோலம் அளவையில்!
★ பட்டு வேட்டி சால்வைகள் ★ கூறைகள்
★ சிறுவர்களுக்கான றெடிமெட் வகைகளுக்கு
எம்மை நாடுங்கள்!

★ மங்கை சில்க்ஸ் ★
8, மத்திய சந்தை, சுன்னுகம்.

அல்லலில் கடலிடை அழுந்துகின்ற
அடியாரை யாட்கொளு மரங்கநாதன்!
பாக்ஸ், பான்ஸி கூட்ஸ் விற்பனையாளர்
★
ரதி பென்ஸி ஹவுஸ்
53, நவீனசந்தை, உட்புறம் யாழ்நகர்

தேவர்க ளெலாம் யாதவர் ஆகுக
தேவமா தர்களும் கோபிய ராகுக!
★ ஆங்கில மருந்து வகைகள்
★ பால்மா வகைகளுக்கு
★ ★
★ சிற்றி மெடிக்கல்ஸ் ★
487, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நாதன் ஸ்ரோர்ஸ்
(மளிகைப் பொருட்கள் வியாபாரம்)
213, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## காளிய நடனமாடுகின்ற கண்ணன்
## இன்று ரதமேறி வருகிறுன்

பூமியின் பாரந் தாங்க முடியாமல் பூமி நாயகி, ஸ்ரீ நாராயணமூர்த்தியிடம்முறையிட்டார். முறைப்பாட்டைக் கேட்ட பெருமான் தானே ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியாகவும், தேவர்கள் எல்லாம் யாதவராகவும் தேவமாதர்கள் கோபியராகவும் பூமிக்கு வந்தனர். வந்த கண்ணன் பற்பல லீலைகள் செய்தான். கம்சன் என்ற கொடியவனை ஒழித்தான். அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலை நாட்டுவதற்கு எடுத்த அவதாரமே கிருஷ்ண அவதாரம்.

அவன் தேவகி வயிற்றிலே சிறைக்கூடத்திலே ஆவணி மாத ரோகிணி நட்சத்திரத்திலே அட்டமித் திதியிலே

மலர் தயாரிப்பு:
உதயன் செய்தியாளர்:
**த. பரமலிங்கம்**

பூமியில் இறங்கினன். அந்தத்தினமே கிருஷ்ண ஜயந்திக் கொண்டாட்டத் தினமாகும். இந்தக் கண்ணன் செய்த திருவிளையாடல்களுள் ஒன்று காளிய நடனம்.

யமுனை நதியில் ஒரு மடு காணப்பட்டது. அந்த மடுவில் காளியன் என்ற பாம்பு வசித்து வந்தது. அந்தப் பாம்பின் விஷத்தால் மடு நஞ்சானது. அதன் மேலாகப் பறக்கும் பறவைகளே இறந்துவிடும். நச்சுக்காற்றுப்பட்டு பல பிராணிகளும் மனிதர்களுமே இறந்தனர். இந்தப் பாம்பாகிய நாக மன்னனை அடக்கி ஆண்ட அற்புதமே காளிய நடனமாகும்.

எமது உடலில் ஆறு ஆதாரமுண்டு. அடிவயிற்றில் இருப்பது மூலாதாரம்— நெற்றிப் புருவம்வரை ஏனைய 5 ஆதாரங்களும் அமைந்துள்ளன. கடைசியானது ஆக்ஞை என்பது குண்டலியாகிய பாம்பு - வாயுவடிவத்தில்ஆக்ஞைவரை கிளம்பும்; அதனுல் தேகம் செயற்படும். 5 ஆதாரங்களையும் மூலாதாரத்தில் அடக்கினுல்தான் தியானம் முதிர்ந்த யோகம் பொருந்தும். மயிலைக்கண்டு பாம்பு அடங்கிவிடும். எனவே முருகனை நினைக்க மயில்வரும். மயில் வந்தால் பாம்பு அடங்கிவிடும். தியான யோகம் கைகூடும். இச் செயற்பாட்டையே, அருணகிரிநாத சுவாமிக்கு முருகன், "சும்மாவிரு" என்ற உபதேசமாக வழிகாட்டினுராம்.

பெறற்கரிய பிறவியாகிய



ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலய முகப்புத் தோற்றம்
படப்பிடிப்பு: 'கண்ணன்'

மனிதப்பிறவி எடுத்தவனே, உனது ஐந்து புலன்களும் — காமக்குரோத மோக லோப மத மாற்சரியம் முதலிய குற்றங்களைப் புரிந்து உன்னைப் பிறவிக் கடலைத்தாண்ட முடி

சங்கானை
**நா. சற்குணம்**

யாமல் தடுக்கின்றன. அந்த ஐந்து புலன்களாகிய ஐந்து தலைப் பாம்பையடக்கினுல் ஞான ஒளி பெறுவாய். எது உண்மை எது பொய்மை என்று காண்பாய் — அன்பென்ற பாற்கடலில் என்னைக் காண்பாய்— ஆனந்தம் சுகித்துத் தூங்காமல் தூங்குவாய்" எனச் சொல்லாமற் சொல்லும் காட்சியே ஆண்டவனின் நாக நடனக் காட்சியாகும்.

அளவெட்டி ஸ்ரீ நாகேஸ்வரத்தில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீநாகவரத நாராயணர்— கிருஷ்ணராசமாகவே வீற்றிருக்கிறார். மேய்சால் நிலமாக—செடியும் கொடியும் சிவமரங்களும் காணப்பட்ட நிலத்திலே பெரிய புற்றருகே பாம்பாகக் காட்சிகாட்டி—

குழந்தையாக நின்று மக்களைக் கவர்ந்தவர், இப்பரம்பொருள்.

சுமார் 200 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால வழிபாட்டிலிருந்த இவ்வாலயம் 1963 க்குப் பின்புதான் பிரபலமடையத் தொடங்கியது.

வைத்திய நிபுணர், இறந்துவிட்டான் எனக் கைவிடப்பட்ட சிறுவன் இவ்வாலய வாசலில் வந்ததும் சுய உணர்வு பெற்று உயிர்த்தமை முதலாய பல அற்புதங்கள் நிகழ்ந்த தலமிது. ஆயிரக்கணக்கான அடியார்கள் தமது மனத்துயரம் தீர்க்க— பெருமான் இன்று தங்கரதமேறி வருகின்றுன். கருணை சொரிகின்றுன். அடியார்கள் வாருங்கள்— உங்கள் குறைகளைக் கூறுங்கள் — என்ன வேண்டும் கேளுங்கள்—தாராளமாகத்தருவான்.

சுபம்

கொடுமைகளைத் தீர்த்தருளும் கோபாலா கோவிந்தா!
படுதுயரம் தீர்ப்பவனே பரந்தாமா பாண்டுரங்கா!
★ குடாநாட்டில் தரமான பிஸ்கற் உற்பத்தியாளர் ★
லீலா பேக் ஹவுஸ்
மாக்கற் சதுக்கப், சங்கானை.
கிளை: சிரணி, சண்டிலிப்பாய்.

தென்னளவையூரில் திகழும் நாகேஸ்வரம் வாழ்
முன்னவனே வேத முதல்வனே - என்னுள்ளத்தில்
நீங்கா துணர்த்திடுவாய் நீலவண்ண நீ நடிக்கும்
பூங்கா வனத்தின் பொருள்!
★ வாசனைத் திரவியங்களின் வடபகுதிக் களஞ்சியம்
பெற்ரு எசன்ஸ் சப்ளையர்ஸ்
223, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### ஸ்ரீ கிருஷ்ண பஞ்சகம்

[பஜனைப் பாடல்]

ஹரே ராம ஹரேராம ஹரேராம கிருஷ்ணராம்
ஹரே ராம ஹரேராம ஹரேராம கிருஷ்ணராம்

1. நாதப்பிரம்ம வாசுதேவ ஹரேராம கிருஷ்ணராம்
நாகவரத நாராயண ஹரேராம கிருஷ்ணராம்
வேதகீத வெங்கடேச ஹரேராம கிருஷ்ணராம்
மேகவண்ண விஷ்ணுதேவ ஹரேராம கிருஷ்ணராம்
(ஹரே)

2. வரதராஜ மங்களாய ஹரேராம கிருஷ்ணராம்
மதுசூதன முரளீதர ஹரேராம கிருஷ்ணராம்
பரமேஸ்வர பண்டுரங்க ஹரே ராம கிருஷ்ணராம்
பத்மநாப சிற்சொரூப ஹரேராம கிருஷ்ணராம்
(ஹரே)

அருட்கவி: சி. வி

பாற்கடலிற் பள்ளிகொண்டு படியளக்கும் திருவரங்கா
நாற்புரவித் தேரினிலே நற்கீதை சொன்னவனே!
தங்க ரதமேறி வாருமையா
★ மளிகைப் பொருட்களை மலிவாக வாங்க ★
விநயகர் ஸ்ரோர்ஸ்
166 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஞாலத்தே பிணிகள் மடிந்திட
நாராயணர் அருள் வேண்டி நிற்கும்!
★ உங்கள் நாளாந்த தேவைகளை
★ எங்களுடன் இணைந்து நிறை வேற்றுங்கள்
★ சந்திரன் ஸ்ரோர்ஸ் ★
உரிமை: வா. சந்திரன்
அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

அருள்மிகு நாச்சியார் துணை!
அமங்கல ஓசைகள் அமிழ்ந்திட
இகமதில் வேணுகானம் கேட்கட்டும்!
★ எம். ஆர். எஸ். ★
ரிம்பர் ஜெனரல் மேச்சன்ற
ரான்ஸ்போட் சேர்விஸ்
உரிமையாளர்: எம் இராஜரத்தினம்
பிரதான வீதி, சங்கானை.

செகத்தைச் சிறப்பிக்க தேருர்ந்து
வாருமையா கோகுலத்துக் கண்ணனே!
★ நியாய விலையில்...
★ புடைவைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு
நாட வேண்டியது
★ விக்கினேஸ் ரெக்ஸ் ★
65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ யந்திரக் கிளையின் வாய் மலர்ந்து
★ மணிரதம் ஓடி வர வேண்டுகின்றோம்!
★ சகலவித அழகுசாதனப் பொருட்களுக்கும் ★
● ஓ ●
அம்பிகாபதி
பான்ஸி றேடர்ஸ்
9A, நவீன சந்தை, உட்புறம்
யாழ்நகர்.

ஸ்ரீ நாகவரத நாராயணர்
சிறப்பிதழுக்கு எமது ஆசி!
★ ஜவுளி உலகின் நவீன முன்னேடிகள் ★
★ றஞ்சனஸ் ★
17, 18, 18A, நவீன சந்தை.
உட்புறம்: யாழ்ப்பாணம்,

அளவையூர் ஸ்ரீ நாகவரத நாராயணர் அவனியதில் தங்கரதம் ஏறி வர நாவாந்துறை மக்கள் சார்பாக நற்செய்தி கூறுகின்றேம்!
S. A. N, அன்ரசன்ஸ்
சமுத்திர வளத்தை நாட்டு வளமாக்குவோர்
கடற்கரை வீதி, நாவாந்துறை.
கிளைகள்:- கடற்கரை வீதி, குருநகர், ஊர்காவற்றுறை, வங்காலை, மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலய தேர்த் திருவிழா சிறப்பிதழ்

## பிரதமகுருக்கள் ஆசியுரை

"தேசமெல்லாம் புகழ்ந் தாடும் கச்சித் திருவேகம்பன் செம்பொற் கோயில்" என்று மாணிக்கவாசகர் சுவாமிகள் புகழ்ந்து பாடும் ஸ்ரீ வரதராஜப்பெருமாள்.

கலியுகத்தில் சர்ப்பத்திற்குக் காட்சியளிப்பார் என்றுபேசப் பெறுகிறது: இதற்கமைய ஸ்ரீ விளக்கொளிப் பெருமானார் இற்றைக்கு 200 வருடங்களுக்குமுன் அளவை ஸ்ரீ நாகேஸ்வரத்தில் சர்ப்பத்திற்கு காட்சி கொடுத்தார். இந்தக் காட்சியை அவ்வூர் மக்களும் கண்டு களித்தனர். அப்புண்ணிய பூமியில் ஸ்ரீ நாகவரதநாராயணருக்குச்செ பொற் கோயில் அமைத்து வழிபட்டனர்: இங்கு சிவனடியார்களும் வந்து வழிபடும் வகையில் சொர்ண லிங்கேசரும் சொர்ணமனோன்மணியும் சிறப்புக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் அத்துவித நிலை. வரும் அடியார்கள் அனைவருக்கும் பேரருள் பாலிக்கும் நிலையே இத்தகு காட்சியை கைலாய கிரியிலும் காணமுடியாது.

காசிக்ஷேத்திரத்தில் கபிலாஹ்ரதம் என்னும் ஓரிடம் உண்டு அங்கு பிரம்ம லிங்கம் ஒன்றை பிரதிஷ்டை செய்ய முற்பட்டார் அதை விஷ்ணுவாங்கி பிரதிஷ்டித்து வழிபட்டார். தாம் பூஜிப்பதற்காக வைத்திருந்த லிங்கத்தை விஷ்ணு எடுத்து வழிபட்டு விட்டாரேஎன பிரம்மா வருத்தம் அடைந்தார். அதை உணர்ந்த விஷ்ணு "நான்முகா உன்னை விட சிவனிடம் அதிகப் பிரீதி உள்ளவன் நான்" என்றார். அதனால் தான் பூஜை செய்தேன் இருப்பினும் உன்பெயரால் இரண்ய கர்ப்பேசர் என்று இவர் விளங்கட்டும். இத்தகு சிறப்பு வாய்ந்த காட்சியை இங்கு கண்டு தரிசித்து துயர் தீர்த்து வாழ எனது ஆசிகள்

கி: உருத்திரபுரேஸ்வரக் குருக்கள்
(தேவஸ்தானமகோற்சவகுரு)

# சிவனே விஷ்ணு; விஷ்ணுவே சிவன்!


# ஒன்றில் இரண்டு; இரண்டும் ஒன்று!

சிவம், விஷ்ணு இருபெரும் கடவுளர்களை சான்றோர்கள் வணங்கி வழிபட்டு வந்தனர். சிவத்தை வழிபடுகின்றவர்கள் சைவர்கள்; விஷ்ணுவை வழிபடுகின்றவர்கள் வைஷ்ணவர்கள்.

உண்மையறிதற்கு ஊழ்

இந்த உலகை உற்று நோக்குங்கள்; தட்பமும் வெப்பமும் சேர்ந்து எங்கும் காணப்படுகின்றது.

ஒரு மலர் மலராக இருக்க வேண்டுமாயின் தட்பமும், வெப்பமும் அதில் சமானமாக இருக்கவேண்டும். மலர் வாடுகின்றது; காரணம் என்ன?



திருமுருக கிருபானந்தவாரியாருடன் அருட்கவி காணப்படுகிறார்: அருகில் வெண்ணிறத் தாடியுடன் நிற்பவர் கும்பிமூாவளை விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை முன்னாள் தலைவர் அமரர் செ: மயில்வாகனம் அவர்கள்.

வேண்டும். உண்மையுணராத சைவர்களும் வைஷ்ணவர்களும், வேற்றுமை மனம் படைத்து ஒருவரையொருவர் வைதும் வாதிட்டும், அமைதியும் சாந்தியும் இன்றி அல்லல்படுகின்றார்கள்.

சைவர்கள் விஷ்ணுவை நிந்திப்பதும், வைஷ்ணவர்கள் சிவத்தை நிந்திப்பதுமாக இருக்கின்றார்கள்; இவர்களுக்கு நிந்தனையில் ஒரு மகிழ்ச்சி. இது அறியாமையின் சிகரம்.

அதில் சமமாக இருந்த குளிர்ச்சி குறைந்துவிட்டது; மலர் அழுகி விடுகின்றது; காரணம் என்ன? அதில் சமமாக இருந்த சூடு குறைந்து விட்டது எனவே சூடும் குளிர்ச்சியும் ஒன்றையொன்று விடாமல் கலந்து மலரில் இருப்பதனால்தான் மலர் அழகு செய்கின்றது.

நமது உடம்பிலும் தட்பமும் வெப்பமும் அமைந்திருக்கின்றன. சூடு குறைந்துவிடுமானால் உயிர் உடம்பில

நிலை பெறுவதில்லை. சூடு குறையைத் தொடங்கியவுடன் சுற்றத்தார் சுற்றி அமர்ந்துவிடுகின்றார்கள்.

சூடும் குளிர்ச்சியும் எல்லையற்றிருக்குமானால் உயிர்கள் அங்கு தோன்றுவதில்லை. சூடு குறைந்த வட துருவப் பிரதேசங்களிலும் குளிர்ச்சி குறைந்த சஹாராவிலும் உயிர்கள் இடர்பட்டுத்தான் வாழ்கின்றன.

தட்பத்தின் சூக்கும ஆற்றல் திருமால்; வெப்பத்தின் சூக்கும ஆற்றல் சிவம். இந்த இரு பொருள்களும் ஒரே பொருளின் இரு பகுதிகள்.

கேசவார்த்தமூர்த்தி; பாதி;

மலர் ஏற்பாடு:
யோண் கிறிஸ்துராஜா

சிவம், பாதி மால்.

சங்கரநாராயணர் திருக்கோயிலில இந்த மூர்த்தி இன்றும் காட்சி தந்து இந்த உண்மையை உணர்த்திக் கொண்டிருக்கின்றது.

பேயாழ்வார் திருவேங்கடமலைக்குச் சென்றார். அங்குள்ள பெருமானைக் காண்கின்றார். ஒருபுறம் சடைமுடியும் மற்றொருபுறம் மணிமுடியும், ஒரு கரத்தில் மழுவும், மற்றொரு கரத்தில் சக்கரமும், ஒரு பாதியில் நாகாபரணமும் மற்றொரு பாதியில் பொன்னாபரணமுமாக அவ்வுருவம் காட்சி தருகின்றது.

ஆகவே அடியவர்கள் சிவநிந்தையும், விஷ்ணு நிந்தையும் புரிந்து நரக வெந்துயருக்கு இலக்காக வேண்டாம் என வேண்டுகின்றேன்.

திருமுருக கிருபானந்தவாரியார் உரையிலிருந்து தொகுத்து வழங்கியவர்:-
அருட்கவி சி. விநாசித்தம்பி

## நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்

தெய்வ நம்பிக்கை மிகுந்த கிறிஸ்தவன் நான். அளவெட்டி ஊரில் அருள் பாலிக்கும் நாகேஸ்வரத் திருத்தலம் பற்றி பலர் சொல்லக் கேட்டு அங்கு சென்ற என்னை ஸ்ரீ நாகவரத நாராயணர் தன்பால் ஈர்த்துக் கொண்ட நிகழ்வுகளை சிந்தித்தால் உடல் சிலிர்க்கும்; உள்ளம் ஆனந்தத்தில் மிதக்கும்.

'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதுபோல் எனது குருநகர் கிராமத்துக் கிறிஸ்தவ மக்களுக்கு நாகேஸ்வரத்தார் தன்மையை எடுத்துரைத்து பலரை அவரது அன்பான பக்தர்களாகவும் ஆக்கி இருக்கின்றேன் என்றால் அதுவும் கண்ணனின் திருவிளையாடல் தான்.

குருநகர். புனித யாகப்பர் ஆலயத்திற்கு சிறப்பு மலர் வெளியிட என்னுடன் தொடர்பு கொண்ட உதயன் செய்தியாளர் திரு. த. பரமலிங்கத்தின் அனுசரணையுடன் எனது இதயத் தெய்வம் நாராயணர் புகழ் பரப்பும் சிறப்பிதழை வெளியிட முனைந்தேன்.

இவ்வருடம் இரு பக்கங்களில்) சிறப்பு மலரை வெளியிட எல்லாம் வல்லம் நாகவரத நாராயணரின் ஆசி கைகூடியதால் உங்கள் கரங்களில் இச் சிறப்பிதழை சமர்ப்பிக்கின்றோம்.

யோண் கிறிஸ்துராஜா.


அகிலாண்ட கோடி பெற்றவனே பூமி
ஆற்றொணுத் துன்பத்தைத் தீர்த்தருள்வாயே!
பகவனே பாண்டுரங் கேசா - அன்று
பார்த்தனுக்கு உபதேசம் செய்தவா போற்றி!

கி. சிலுவைதாஸன் ஜே. பி.
13, மத்திய கிழக்கு வீதி,
றெக்கிளமேஷன்,
குருநகர்.

அளவையூர் ஸ்ரீ நாகவரத நாராயணர்
நாமம் அகிலமெலாம் பரவுவதாக!

நியூ சாந்தினி கபே
(சென்: ஜேம்ஸ் மகா வித்தியாலய முன்பாக)
மத்திய மேற்கு வீதி,
குருநகர்.

வந்தருள்வாய் மாதவனே வானீல மேனியனே
தந்தருள்வாய் நின்கழலே தண்துலப மாலையனே!

பொன்னுத்துரை சேகர்
(யூலியஸ்)
சென்: பற்றிக்ஸ் வீதி, குருநகர்.

அளவையூர் அமர்ந்தருள் பாலிக்கும்
அண்ணலார் நாராயணர் தேரில் வருக!

வி. இ. றஞ்சித்
கொண்டடி வீதி, குருநகர்.

கோவிந்தன் வைகுந்த வாசா - என்றன்
குறைகேட்டு திருவுள்ளம் இரங்குவாய்!

"தேவி சலூன்,
45A, மவுண்கார்மல் வீதி, குருநகர்.

ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்
(பலசரக்கு வியாபாரம்)
வல்லை வீதி, சங்கானை.

பார்போற்றும் அளவை ஸ்ரீநாகவரத
பகவான் வீதியுலா எழுக எழுகவே!

✶ அழகுக்கு அழகு செய்யும்
✶ அழகிய தங்க நகைகளுக்கு

சோபனு ஜுவல்லறி
116 V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மீண்டும் மிக விரைவில் தொலைத்தொடர்பு
சேவைகள் ஆரம்பமாக இருக்கின்றன.

"றெஜின் குளோப்"
12, சின்னக்கடை வீதி, குருநகர்.

பொன்னுயர் திகிரி பொலிமலர் தண்டு
இன்னிசைச் சங்கம் ஏந்திய கிருஷ்ணு
முன்னிய திருவாய் மொழியெமக் குரைப்பாய்
மன்னவா நாகவரதநாரணனே!

கி. யூட்ஸ் அன்ரனி
20, கடற்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

தென்னளவை யூரில் திகழும் நாகேஸ்வரம் வாழ்
முன்னவனே வேத முதல்வனே - என்னுள்ளத்தில்
நீங்கா துணர்ந்திடுவாய் நீலவண்ணு நீ நடிக்கும்
பூங்கா வனத்தின் பொருள்!

✶ நவநாகரிக புடைவைத் தினிசுகளுக்கும்,
✶ பட்டுவேட்டி சால்வை, கூறைச் சேலைகளுக்கும்

"சீமாட்டி"
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

முத்தமிழ் நயக்கும் மூர்த்தியே தரும
தத்துவ நடனச் சரசகோ விந்தா
பத்தியா லுன்சீர் பாடிடப் பணிவாய்
மத்தனே நாகவரதநா ரணனே!

★ கே. ஞேமவாழ்தர் ★
[கெனடி]
பாக்ரேட் றெக்கிளமேசன், குருநகர்.

பாற்கடலிற் பள்ளிகொண்டு படியளக்கும் திருவரங்கா!
நாற்புரவித் தேரினிலே நற்கீதை சொன்னவனே
தங்க ரதமேறி திருவீதியுலா வாருமையா!

★ கே. அந்தோனிப்பிள்ளை ★
[அன்ரன்]
17, பாக்ரேட், குருநகர்,

ஸ்ரீநாகவரத நாராயணர்
சித்திரத்தேர் பவனிவர யாசிக்கின்றோம்!

✶ இரும்புப் பொருட்கள்,
✶ மின்சாரப் பொருட்கள்
✶ எஸ்லோன் பைப்புகள்
விற்பனையாளர்,

பைவ் ஸ்ரார் கொம்பனி
பிரதான வீதி, சங்கானை,

வண்டுறையும் நின்பாத மலரினையெம் தலைவைத்து
மகிழின்ப வாழ்வு தருவாய்!
மன்னும் ஆவணி கிருஷ்ண ஜயந்திரத மேறிவரும்
மாதவ மகாதேவனே!

✶ பலசரக்குப் பொருள்களை மொத்தமாகவும்:
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

★ குகன் ஸ்ரோர்ஸ் ★
180, (380) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

காரிருள் சூழ்ந்ததால் கண்டிலோம்
காட்சிதந்து வையம் காருமையா!

கோயில் அபிஷேகத் திரவியங்கள்
விற்பனையாளர்;

ராஜா மெடிக்கல் ஸ்ரோர்ஸ்
(மருந்துக் கடை)
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

ஸ்ரீ நாகவரத நாராயணர் சித்திரத் தேரூர்ந்து வருக!

எஸ். ஜீவராஜன் (ஜீவா)
சமுத்திர வளத்தை நாட்டு வளமாக்குவோர்
குருநகர்வாடி, யாழ்ப்பாணம்.

காரிருள் சூழ்ந்ததால் கண்டிலோம் காட்சிதந்து வையகம் காருமையா!

ஏ. எம். எல். அன் எடிசன்
சமுத்திர வளத்தை நாட்டு வளமாக்குவோர்
26, சென். ஜேம்ஸ் கிழக்கு வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகன உரிமையாளர்களுக்கு:

★ ஒரு நற்செய்தி!

புன்னாலைக்கட்டுவன் சேவிஸ்ரேசன்

மின்சாரம் இல்லாத போதும் ஜெனரேட்டர் மூலம் 50 நாட்களாக வேலை நடைபெறுகின்றது.

உரிமையாளர்:
மூ. வரதராசன்.

(1594)



வெளிநாட்டு

# பிரயாண ஒழுங்குகள்

● ஜெர்மனி (GERMANY)
(16 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு உடனடி பிரயாண ஏற்பாடு)

● சுவிஸ்லாந்து (SWISS)

● இத்தாலி (ITALY)

● பிரான்ஸ் (FRANCE)

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஏற்பாடுகள் துரிதகதியில்செய்து கொடுக்கப்படும்

✶ Pass Port மற்றும் Bond ஆகியவை விரைவில் செய்து கொடுக்கப்படும்.

அத்துடன் ஆங்கில தட்டச்சு English (Typing) போட்டோஸ்ரற் (Photo Stat) கொப்பிகள் உடன் செய்து கொடுக்கப்படும்.

# கமல்ஸ் சேர்விஸ் & ரேடிங்ஸ்

ரவல் ஏஜன்ட்ஸ் & எயர் ரிக்கட் புக்கிங்ஸ்

நாகம்மா பில்டிங்ஸ்,
முதல் மாடி [பஸ்நிலையம் முன்பாக]
404/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கீழ்க் கண்ட விலாசத்திலும் தொடர்பு கொள்ளலாம்:
உரிமையாளர்;

N. கனகரட்ணம் [ஐவோம்]
சுமதி ஸ்ரோர்ஸ்
கொக்குவில் மேற்கு,
காந்திஜி வீதி, கொக்குவில்

[சி/3539]



# வெற்றிடங்கள்

கண்ணாடி தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள ★ புளோவர்ஸ் (BLOWERS) ★ ஹெல்ப்பர்ஸ் (HELPERS) ★ பபிளேர்ஸ் (BUBBLERS) தேவை: அனுபவத்துக்குத் தகுந்த வேதியம் வழங்கப்படும்: தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்: இத்துடன் வேலை பயில்பவர்களுக்கும் வெற்றிடங்கள் உண்டு:

நேரில் சமுகமளிக்கவும்:

த. பெனின்சுலா குரூப்
மகேந்திரா கண்ணாடி தொழிற்சாலை
அரஸ்கோ கட்டடம்
163, கண்டி வீதி,
அரியாலை.

(C/3542)


விண்ணக வாழ்வின்
45ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு:
07 - 03 - 1952

●●●●

உதிர்வு:
11 - 07 - 1989

அமரர்
R. சிங்கராசா ஸ்ரனிஸ்லோஸ்
(இலங்கைச் சிறுவர் நலன் பாதுகாப்புத் திணைக்களம்)

அன்பின் தெய்வமே! உங்கள் பிரிவால் உள்ளம் உடைந்து கண்ணீர் உகுக்கின்றோம்: உங்கள் அன்பின் உருவமும் சொல்லும் செயலும் எங்கள் இதயத்தில் என்றுமே இடம்பெற்றிருக்கும்:

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமகன்,
மைத்துனன், மைத்துனிமார், உறவினர்.

சென், அன்ரனிஸ் லேன்,
பண்டத்தரிப்பு:

(1660)

# இங்கிலாந்து - ஆஸி அணிகள்
# இன்று இறுதி டெஸ்ட் போட்டியில்

லண்டன், ஆக. 24

இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் ஆஷஸ் கிண்ணத்துக்காகநடைபெறும் கிரிக்கெட் டெஸ்ட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது.

லண்டனிலுள்ள ஓவல் மைதானத்தில் இப்போட்டி நடைபெறுகின்றது:

இதுவரை முடிவடைந்துள்ள 5 போட்டிகளில், வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த மூன்றாவது டெஸ்ட் போட்டி தவிர்ந்த ஏனைய நான்கு போட்டிகளிலும் வெற்றி பெற்றதன்மூலம் ஆஸி அணி 4—0 என்ற ரீதியில் முன்னணியில் உள்ளது.

இன்று ஆரம்பமாகும் ஆறுவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்தின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிரஹாம் கூச் மீண்டும் கலந்து கொள்கின்றார்.

5ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியின் சார்பாக ஆடிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான மார்டின் மொக்சன், டிம் கேர்டிஸ் ஆகியோர் ஆறுவது போட்டிக்கான குழுவில் இடம் பெறவில்லை:

ஜொஹான் ஸ்டீவன்சன்,

## விளையாட்டு அரங்கு

இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட நசார் ஹுசெய்ன் ஆகியோர் இங்கிலாந்து அணியின் ஆறுவது டெஸ்ட் குழுவில் இடம்பெற்றுள்ள அணியின் புதுமுகங்களாவர்.

இவர்களுடன் டேவிட் கப்பலும் ஆறுவது டெஸ்ட் குழுவில் இடம் பெற்றுள்ளார் இங்கிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரரான இயன் பொதம் கையில் ஏற்பட்ட காயம் காரணமாக இப்போட்டியில் கலந்துகொள்ளவில்லை. (இ 6)

## கிளிநொச்சி ம.வி. விளை. துறையில் முன்னணியில்

அச்சுவேலி, ஆகஸ்ட் 24

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயம் விளையாட்டுத் துறையில் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னணியில் திகழ்கின்றது.

இப்பாடசாலை கிளிநொச்சி கோத்தணி மட்ட பாடசாலைகள் மத்தியில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டிகளில் 17 வயது ஆண்கள் பிரிவிலும் 19 வயது ஆண்கள் பிரிவிலும் 17 வயது பெண்கள் பிரிவிலும் 19 வயது பெண்கள் பிரிவிலூா முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டது.

மாவட்ட ரீதியில் நடைபெற்ற போட்டியில் மூன்று பிரிவுகளில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

மாவட்ட ரீதியில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் 17 வயது ஆண்கள் 19 வயது ஆண்கள் பிரிவுகளில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (க-11)

## நீர்வேலிமுகாம் மூடப்பட்டது

யாழ்ப்பாணம், ஆக. 24

நீர்வேலியில் பிரதான வீதியில் இருந்த அமைதிப்படை முகாம் நேற்று மூடப்பட்டது. (ஓ-160)

எயர்லங்கா விமானக்குண்டுவெடிப்பு:

# நான்கு எதிரிகளுக்கு மீண்டும் மறியல்!

கொழும்பு, ஆகஸ்ட் 24

எயர்லங்கா த்ரிஸ்டார் விமானக் குண்டு வெடிப்புச் சம்பவ வழக்கில் சம்பந்தப்பட்ட நான்கு எதிரிகளும், கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி எச். டபிள்யு. சேனநாயக்காவின் உத்தரவின் பேரில் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த எதிரிகள் அளித்த வாக்குமூலங்கள் அவர்களாக விரும்பி அளித்தவை அல்ல என்று நீதிபதி திரு: சேனநாயக்கா கடந்த வாரம் தீர்ப்பளித்திருக்கிறார் என்பது தெரிந்ததே.

அதை அடுத்து வழக்கு விசாரணையைத் தொடர்ந்து நடத்துவதா இல்லையா என்பது பற்றி முடிவு செய்ய அரச தரப்புச் சட்டத்தரணிக்கு கடந்த திங்கட்கிழமை வரை கால அவகாசம் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டு இருந்தது.

அதன்படி திங்கள் இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது:

அப்போது அரச சட்டத்தரணி திரு: காந்திலால் குமாரசிறி, விசாரணையைத் தொடர்ந்து நடத்துவது பற்றித் தீர்மானிக்க வழக்கு சம்பந்தமான சகல ஆவணங்களையும் சட்டமா அதிபர் கோருவதாக நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார்:

நீதிபதி: (அரச சட்டத்தரணியை நோக்கி) வார இறுதியில் என்ன செய்துகொண்டிருந்தீர்? இதுபற்றி நீர் யோசிக்கவில்லையா?

அரச சட்டத்தரணி; அதனால்தான் இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பித்திருக்கிறேன்:

நீதிபதி: வாக்குமூலங்களை மறந்துவிடுங்கள். வேறு ஏதாவது சாட்சிகள் உண்டா? எதிரிகளின் வாக்குமூலங்களை நிராகரித்தால் விசாரணையைத் தொடரப்போவது இல்லை என்று நீர் முன்னர் கூறியது பதிவில் உள்ளது:

அரச சட்டத்தரணி: ஆம். விசாரணையின் போது நெறிப்படுத்தப்படாத சாட்சிகள் எம்மிடம் உண்டு தேயிலைப் பெட்டிகள் தொடர்பாக சாரதி ஒருவரும் கிளினர் ஒருவரும் சாட்சியமளிக்கவில்லை:

நீதிபதி: இந்த நீதிமன்றத்தில் மட்டுமல்ல, வேறு எங்கேயாவது தேயிலைப் பெட்டிக்குள் குண்டு வைக்கப்பட்டிருந்ததாகக் கூறும் சாட்சியத்தை நீர் நெறிப்படுத்தி இருக்கிறீரா?

அரச சட்டத்தரணி: நிபுணத்துவ சாட்சி ஒருவர் வெளிநாட்டில் இருக்கிறார். அரசாங்க இரசாயனப் பரிசோதகரையும் மீண்டும் அழைக்கப் போகின்றேன்.

எதிரிகள் தரப்புச் சட்டத்தரணி திரு. ஆர். இ. தம்பிரத்தினம் அரசதரப்புச் சட்டத்தரணியின் விண்ணப்பத்துக்கு ஆட்சேபம் தெரிவித்தார்.

சட்டப்படி சட்டமா அதிபரின் விண்ணப்பத்தை ஏற்க வேண்டியிருப்பதாகக் கூறி, அரசதரப்புச் சட்டத்தரணியின் விண்ணப்பத்தை நீதிபதி அனுமதித்தார்: (ஓ-எ)


உடனடி

# வேலை வாய்ப்பு

★ சவூதி அரேபியா
(Saudi Arabia)

S. O. M. C, Afras, Al Rajah
கொம்பனிக்கு
பின்வரும் வெற்றிடங்கள் உண்டு.
உடன் தொடர்பு கொள்ளவும்.

★ கிளீனேர்ஸ் (Cleaners)
★ கூலி வேலையாட்கள் (Labourers)
★ சாரதிகள் (Drivers)
★ மேசன் (Mason)
★ தச்சு வேலை (Carpenter)
★ பிளம்பர் (Plumber)
★ மின் தொழில் செய்பவர் (Electrician)
★ வெல்டர்ஸ் (Welders)
★ பெயின்ரேர்ஸ் (Painters)
★ மெக்கானிக்ஸ் (Machanics)
★ H. O. Operators
★ டயர் பிற்றர் (Tyre Fitter)
★ பிற்றர்ஸ் (Fitters)
★ சிவில் பொறியியலாளர் (Civil Engineers)
★ எழுதுவினைஞர் (Clearks)
★ மேற்பார்வையாளர் (Supervisor)
★ பவர் பிளான்ற் ஒப்பறேற்றர்ஸ் - (Power Plant Operators)

தயவு செய்து வெளிநாடு செல்பவர்கள் சவூதி அரேபியா தவிர வேறு எந்த நாட்டிற்கும் கடவுச் சீட்டு கொடுக்க வேண்டாம்.

மற்றும்

கடவுச்சீட்டு, 5 படம், அனுபவச்சான்றிதழ் கொடுத்தால் மட்டும் போதும்

★ எதுவித பணமும் கொடுக்க வேண்டாம்

வயது: 21 — 48 வரை

புதிய முகவரி:-

# T. V. TRAVELS & TOURIST

Sivan Pannai Road,
Koddady Junction,
JAFFNA.

(சி-3545)


3ஆம் ஆண்டு இதய அஞ்சலி



திரு. சண்முகசுந்தரக்குருக்கள்
[சூரியகுமாரன்]
(முன்னாள் யாழ். ஹற்றன் தேசிய வங்கி முகாமையாளர்)

அன்னை மடியில்: 20 - 11 1952
ஆண்டவன் இணைப்பில்: 24 - 08 - 1986

கண்மணியாய் வளர்த்தேன்
கடமையில் கல்வியில் முன்நின்றாய்
மண்ணிலே மேன்மையுற்றாய்
மக்கள் மனம் குடி கொண்டாய்
எண்ணிய எண்ணமெலாம்
ஈடேறும் வேளையிலே
விண்ணவர்கள் அழைப்புத்தான்
விரைந்து வந்து சேர்ந்ததுவோ?

நினைந்து நினைந்துருகும்:
அம்மா, சகோதரன்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்:

(1688)

45 ஆம் நாள் நினைவஞ்சலி



வேலுப்பிள்ளை பேரின்பநாதன்

மண்ணில்: 02 - 02 - 1954
விண்ணில்: 11 - 07 - 1989

எத்தனை கற்பனைகள் உள்ளத்தில் உதித்தனவோ!
அத்தனையும் நிஜமாகும் வேளையிலே
உங்களை இழந்து மனம் துடிக்கின்றோம்.!
நித்தியமும் கண்ணீரை விழிதனிலே நிறைத்துவிட்டு
அணையா ஜோதியென ஒளியேற்றிச் சென்றீரே!
எங்களை வாழவைக்க நீங்கள் பட்டபாட்டினை
எவ்வி எண்ணித் துடிக்கின்றோம்
எங்கள் பேரின்பனே!

24-08-1989 இன்று வியாழக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களையும் வேண்டுகின்றோம்;

ஓம்சாந்தி! ஓம்சாந்தி!!

மனைவி, மகள் உற்றார், உறவினர்கள்;

தம்பளை வீதி, புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

[1683]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● இந்திய - பாக். எல்லைப்பேச்சுக்கள் தோல்வியில்:

# ஓர் அங்குல நிலமும் பறிபோகவிடமாட்டோம்; சியாச்சென் போர்முனையில் பெனுஸிர் சூளுரை!

## பாக். இராணுவ நிலை முன் வெடித்த இந்திய ஷெல்கள்

இஸ்லாமபாத், ஆக. 23 உலகில் மிக உயரத்தில் உள்ள போர் முனையாகக் கருதப்படும் சியாச்சென் பனிப் பிரதேச எல்லைத் தகராறு சம்பந்தமான இந்திய - பாகிஸ்தான் சமாதான பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்தன என்று பாகிஸ்தான் பிரதமர் பெனுஸிர் பூட்டோ தெரிவித்தார்.

இருநாடுகளுக்கும் இடையேயான இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் முடிவில் பிரதமர் பெனுஸிர் முதல் தடவையாக நேற்று (செவ்வாய்க்கிழமை) எண்ணாயிரம் மீற்றர் உயரத்தில் உள்ள சியாச்சென் போர்முனைக்குச் சென்றார்.

35 வயதான பிரதமருடன் அவரது பாதுகாப்பு ஆலோசகரான மேஜர் ஜெனரல் இம்தியாஸ் அலி, பாதுகாப்பு இணை அமைச்சர் சீமா ஆகியோரும் சென்றிருந்தனர்.

### துருப்புக்கள் மத்தியில் பெனுஸிர்

சியாச்சென்னில் பாகிஸ்தான் துருப்புக்கள் மத்தியில் பிரதமர் பெனுஸிர் பேசினார்.

நாட்டைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டுள்ள அவர்களின் சேவைகளை பிரதமர் பாராட்டினார்.

### செய்தியாளர் மத்தியில் பெனுஸிர்

பின்னர் கூடச் சென்றிருந்த செய்தியாளர் மத்தியில் பிரதமர் பேசினார். அப்போது அவர் சொன்னதாவது!

காரகோரம் மலைத் தொடரில் உள்ள சியாச்சென் பனிப் பிரதேச கேந்திரத்தில் மோதல்களை நிறுத்துவது பற்றிய பேச்சுக்கள் இரு நாடுகளுக்கு இடையே நடந்து வந்தன. அப்பேச்சுக்கள் இப்போது சகதிக்குள் சிக்கிய நிலையை அடைந்துவிட்டன.

### பேச்சுக்கள் தோல்வி

எதிர்வரும் குளிர்காலத்திற்கு முன்னர் இப்பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்படும் என்று எதிர்பார்த்தேன் துரதிஷ்டவசமாக அது ஏற்படவில்லை.

இன்னொரு போர்க்காலம் ஆரம்பமாவது தவிர்க்க முடியாததாகி விட்டது.

பாகிஸ்தானின் ஓர் அங்குல நிலத்தைக்கூட பறிபோகவிடமாட்டோம். எமது படை வீரமுடன் எதிரிகளை எதிர்த்துப் போரிடும்.

இப்படி பிரதமர் பெனுஸிர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பிரதமர் பெனுஸிர் போர் முனைக்குச் செல்லுவதற்கு முதல் நாள் இந்தியத் துருப்புக்கள் ஏவிய ஐந்து ஷெல்கள்



பெனஸிர்

பாகிஸ்தான் இராணுவ நிலையின் முன்னால் விழுந்து வெடித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இரு நாடுகளின் படைகளில் உள்ள ஆட்பலம் பற்றிய விவரங்கள் வருமாறு:

**இந்தியா**

மொத்த ஆயுதப் படையினர்; 13 லட்சத்து 62 ஆயிரம்: இராணுவம்: 12 லட்சம்; கடற்படை: 52 ஆயிரம். விமானப்படை: ஒரு லட்சத்து 15 ஆயிரம். கடல் -விமானப் படை: 2 ஆயிரம். ரிஸர்வ் இராணுவம்: 2 லட்சம். பிரதேச ராணுவம்: 40 ஆயிரம். மத்திய ரிசர்வ் பொலீஸ்: 90 ஆயிரம், எல்லைப்பாதுகாப்புப் படை: 90 ஆயிரம். அஸாம் ரைபிள்ஸ் படை: 40 ஆயிரம்;

**பாகிஸ்தான்**

பெரத்த ஆயுதப்படை: 4 லட்சத்து 80 ஆயிரத்து 600. இராணுவம்: 4 லட்சத்து 50 ஆயிரம், கடற்படை: 16 ஆயிரம், விமானப்படை: 17 ஆயிரத்து 600.

பரா இராணுவம்: 75 ஆயிரம், எல்லைத் துருப்புக்கள்: 65 ஆயிரம், ரேஞ்சர்ஸ்: 15 ஆயிரம், தொண்டர் ராணுவம்: 7 ஆயிரம். (எ)

## இந்திய முயற்சி தோல்வியில்

வாஷிங்டன், ஆ. 23 இந்தியாவுக்கு சூப்பர் கம்பியூட்டர் விற்பனை செய்யும் அமெரிக்காவின் திட்டம் இழுபறி நிலையில் இருக்கிறது.

பெங்களூரில் உள்ள இந்திய விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனத்தில் பயன்படுத்தப்படுவதற்காக சூப்பர் கம்பியூட்டர் அமெரிக்காவிடம் இருந்து வாங்க இந்தியா தீவிர முயற்சி எடுத்து வந்தது. (எ)

## பாடசாலைகள் மூடப்பட்டன

காபூல், ஆ. 23 கெரில்லாக்கள் தொடர்ந்து நடத்தும் ரொக்கெட் தாக்குதல்கள் காரணமாக காபூலில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளன.

சுமார் ஆறு ஆரம்பப்பள்ளிகள் இதுவரை ரொக்கெட் தாக்குதல்களினால் சேதமடைந்தன. (எ)

## தப்பிஓடும் கி. ஜேர்மன் பிரஜைகள்

இருநூற்றிஐம்பது கிழக்கு ஜேர்மன் பிரஜைகள் வார இறுதியில் சட்டவிரோதமாக எல்லைப்புறங்களைக் கடந்து ஹங்கேரி மற்றும் ஆஸ்திரியாவுக்கும் தப்பிச் சென்றனர் என்று அறிவிக்கப்பட்டது.

## வொயேஜர் - 2 விண்கலம் இன்று நெப்டியூன் அருகில்

பஸதேனா, ஆக. 22 விண்கலம் 'வொயேஜர்' 2 இன் 12 ஆண்டுகால விண்வெளிப் பயணத்தின் உச்சக் கட்டம் நாளை மறுநாள் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

நெப்டியூன் கிரகத்தை இவ் விண்கலம் வியாழக்கிழமை தாண்டிச் செல்லவிருக்கிறது.

இக்கிரகத்தில் இருந்து 3 ஆயிரம் மைல் தூரத்தில் வொயேஜர் 2 செல்லவிருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

வொயேஜர் - 2 விண்கலம் இதுவரை 3 கிரகங்களைத் தாண்டிச் சென்றது.

கடந்த 21 ஆண்டுகளில் வொயேஜர் 2 விண்கலம் விண்வெளியில் 300 கோடி மைல் தூரம் பயணம் செய்திருக்கிறது.

நெப்டியூனைச் சுற்றியுள்ள இரண்டு வளையங்கள், நான்கு சந்திரன்கள் ஆகியவற்றை ஏற்கனவே கண்டுபிடித்த இவ் விண்கலம் இக்கிரகத்தை தாண்டிச்செல்லும் போது இன்னும் புதிய தகவல்களை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

## 2கோடிடாலர் கரிபியன் நாட்டுவங்கியில் வி. பி. சிங்கின் இரகசியப்பணம்

### குவைத் பத்திரிகை தகவல்

கரிபியன் தீவுகளில் ஒன்றான செண்; கிறிஸ் என்ற நாட்டில் இரகசிய வங்கிக் கணக்கு ஒன்றில் 2 கோடி 10 லட்சம் அமெரிக்க டாலர் பணத்தை ஜனதாதள் தலைவர் வி. பி சிங் வைப்புச் செய்திருப்பதாக குவைத் ஆங்கில நாளிதழ் 'அரபு டைம்ஸ்) செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்திய அரசியல் வட்டாரங்களை ஆதாரங்காட்டி பத்திரிகை வெளியிட்ட செய்தியில் ராஜீவ் அமைச்சரவையில் திரு. வி. பி. சிங் நிதி அமைச்சராக இருந்த போது தான் இப்பணம் வைப்புச் செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

திரு. சிங்கின் இரகசிய வங்கிக் கணக்கு பற்றிய தஸ்தாவேஜுகள் தன்னிடம் இருப்பதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.


★ சிவாகி சாவகச்சேரி ★

89 DEC O/L

YR 10 வகுப்புகள்

ஆரம்பம்: 27-08-1989 ஞாயிறு 10.30 மணி

| | |
|---|---|
| SC — J, R குரி | MATHS — செல்வா |
| ENG— பாலன் | TAM — சுந்தரலிங்கம் |
| SOCIAL — கருணாகரன் | COM — இரகுநாதன் |

✱ முதன் முதலாக யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை (1696)



யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

வீதிவேலைப் பொருட்களுக்கான கூறுவிலை மீள் அறிவித்தல்-1989

(ஆவணி - மார்கழி)

யாழ் மாநகராட்சி மன்றத்திற்கு வீதி வேலைப் பொருட்களான கண்டகல், கிறசர்சல்லிகள், கையினால் உடைத்த சல்லி, மண்வகைகள், ஊரி கிறசர் தூள், மக்கி, முதலியவற்றிற்கான கூறுவிலை விநியோகத்தர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

கூறுவிலைகள் யாழ் மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 31-08-1989ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00மணிவரை ரூபா500/- மீளளிக்கப்படும் பிணைப்பணமாகவும் ரூபா 50/- கேள்விப் படிவக் கட்டணமாகவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் இணைப்பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு பொருள் விநியோகத்திற்கும் தனித்தனியான படிவங்களில் கூறுவிலை குறிக்கப்பட்டு 01-09-1989 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

கூறுவிலை அனுப்பும் கடித உறை அரக்கு முத்திரையிடப்பட்டு 'மராமத்துப் பகுதி வீதி வேலைப்பொருட்களுக்கான கூறுவிலை' எனக் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.


மேலதிக விபரங்களுக்கு யாழ் மாநகர அலுவலக மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மராமத்துப்பகுதி,
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம், 18-08-1989. [ஜ-3544]



புரோட்டீன் நிறைந்த புரோட்டினெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!




Grant BUK&E PFL 1158

புரோட்டினெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டினெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது

Pfizer

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.



ஷப்ருவின் → புதிர்ப் போட்டி

நல்லைக் கந்தன் திருவிழாவை முன்னிட்டு "ஷப்ரு" நிதி நிறுவனத்தால் நடத்தப்படும் புதிர்ப்போட்டி

★ கவர்ச்சிகரமான பரிசில்கள் ★

| | |
|---|---|
| முதலாம் பரிசு:- | தங்க மோதிரம் |
| இரண்டாம் பரிசு:- | பட்டுச்சேலை / பட்டுவேட்டி |
| மூன்றாம் பரிசு:- | வெள்ளிப் பாத்திரங்கள் |

★ மற்றும் 25 ஆறுதல் பரிசில்கள் ★

- மேற்குறிப்பிட்ட பரிசில்களைப் பெற நீங்கள் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதி இதற்கெனக் கோயில் வீதிகளில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடவும்.
- ஷப்ரு நிதி நிறுவன ஊழியர்களோ அல்லது உதயன் பத்திரிகை நிறுவன ஊழியர்களோ அவர்களது குடும்பத்தாரோ இப்போட்டியில் பங்கு பற்ற முடியாது.
- நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

போட்டி முடிவுத் திகதி:- 31-08-1989

நம்பிக்கை, நாணயத்தின் சின்னம்

ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,.

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு — 4,
தொ. பே: 589310, 500576

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்;
தொ. பேசி: 22073, 24805

1. 'ஷப்ரு' ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது எத்தனை ஆண்டுகள் பூர்த்தியாகி உள்ளன?
.................................
2 ஷப்ருவில் ஒருவர் மாதம் ரூபா 60/- வட்டி பெற வைப்பில் இடவேண்டிய அதி குறைந்த தொகை எவ்வளவு?
.................................
3. ஷப்ருவினால் புதிதாக அமைக்கப்படும் கட்டிடம் எங்கு எவ்விடத்தில் கட்டப்படுகிறது?
.................................
4. நிலையான வைப்புத்திட்டத்தில் 3 வருடங்களுக்கு ரூபா 6000/- மாத வட்டியில் இட்டு, அவ்வட்டியை மாதாந்த சேமிப்புத் திட்டத்தில் இடுவீர்களாயின் அக்கால முடிவில் நீங்கள் பெறும் முழுத்தொகையின் வருடாந்த வட்டி விதம் எவ்வளவு?
.................................
5. நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டுவித்த மன்னர் யார்?
.................................
6. நல்லூர் ஆலயச்சித்திரத்தேர் எந்த ஆண்டு முதன்முதலாக இழுக்கப்பட்டது?
.................................

பெயர்:- .................................
முகவரி:- .................................
.................................

.................................
கையொப்பம்

[ஜ-3240]



யாழ்ப்பாணக் கல்லூரி

புதிய மாணவர் அனுமதி-1990

பின்வரும் வகுப்புக்களில் மாத்திர புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்

1. முதலாம் வருடம்: 1-2 84 க்கும் 31-1 85 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியிற் பிறந்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

2. ஆறும் வருடம்: 1 2-79 க்கும், 31-1-80 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியிற் பிறந்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

விண்ணப்பப் படிவங்களைக் கல்லூரிக் காரியாலயத்தில் பெற்றுப் பூர்த்தி செய்து ரூ 25/ விண்ணப்பக் கட்டணத்துடன் 14-10-89 க்கு முன் சமர்ப்பிக்கவேண்டும்.

முதலாம் வருடத்திற்கான தேர்வு 7 - 10 - 89ல் நடைபெறும்.

ஆறும் வருடத்திற்கான அனுமதிப் பரீட்சை 21 - 10 - 89 இல் நடைபெறும்.

3. பன்னிரண்டாம் வருடம்: க. பொ. த. (சா) பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் படுவர்.

விண்ணப்ப முடிவு திகதி: 31 - 8 - 89

- அதிபர்.

வட்டுக்கோட்டை: (ஜ/3239)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிவு விலையில் அறிமுகம்

**Chilton Trip Switch**

மின்பொறியியலில் புகழ்மிக்க

OTTERMILL CHILTON LTD

நிறுவனத்தாரின் தயாரிப்பு

சுந்தர் சன்

சந்தைமுன், மானிப்பாய்.



# உதயன்

24 · 08 · 1989 வியாழக்கிழமை



CHILTON
CHILTON
CHILTON
CHILTON
CHILTON


## தேவாவின் பாதுகாவலர் கத்தியால் குத்தப்பட்டார்!

கொழும்பு, ஆக 24

முன்னுள் அமைச்சரும் எம்.பியுமான திரு. கே. டபிள்யு. தேவநாயகத்தின் மெய்ப்பாதுகாவலரான சப்இன்ஸ்பெக்டர் நேற்று முன்தினம் (செவ்வாய்) காலை இனந்தெரியாத நபர் ஒருவரினுல் கத்தியால் குத்தப்பட்டார்.

திரு தேவநாயகம் தற்சமயம் பொதுச்சேவை ஆணைக்குழுவின் தலைவராக இருக்கிறார். அதனுல் அவருக்கு அமைச்சர்களுக்கான பாதுகாப்புப்பிரிவு இன்னமும் பாதுகாப்பு வழங்கிவருகிறது.

இந்தக் கத்திக்குத்துச் சம்பவம் கொம்பனித்தெருப் பகுதியில் இடம்பெற்றது.

காயங்களுக்குள்ளான சப்-இன்ஸ்பெக்டர் இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (உ-எ)

## கல்கிசை சட்டத்தரணியை காரில் வந்தோர் கடத்தினர்

கொழும்பு, ஆக 24

கல்கிசை நீதிமன்றத்தில் தொழில்புரியும் சட்டத்தரணி அபயபண்டார அத்தனுயக்காவை இலக்கத்தகடு இல்லாத காரில் வந்த சிலர் கடத்திச் சென்றனர்.

கடந்த ஞாயிறு இம்சம்பவம் இடம்பெற்றதாக இலங்கை வழக்கறிஞர் சங்கம் பொலிஸ் மாஅதிபரிடம் முறையிட்டுள்ளது.

இக்கடத்தல் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்டதாகவும் சங்கம் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது.

இதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் கல்கிசை, மொரட்டுவை, பாணந்துறை, ஹொரணை மற்றும் மத்துகமபகுதிகளில் உள்ளநீதிமன்றங்களில் தொழில்புரியும் சட்டத்தரணிகள் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தைக் கடந்த செவ்வாய் மேற்கொண்டனர். (ஓ-எ)

## ஸ்ரான்லி வீதி வங்கியில் நாளை நிவாரணப் பணம்

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 24

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளையில் நாளை வெள்ளிக்கிழமை முன்னர் பெயர்குறிப்பிடப்பட்டு மீளக்குடியமர்தல் நிவாரணம் பெறாத 849 குடும்பங்களுக்கு நிவாரணப் பணம் வழங்கப்படவுள்ளது.

நிவாரணத்தைப் பெறத் தவறியவர்கள் தங்கள் பகுதி கிராம சேவையாளர்களிடம் சென்று வங்கி இலக்கத்தைப் பற்றுவருமாறு வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது.

கிராம சேவையாளர் பிரிவுகளும் குடும்ப எண்ணிக்கையும் வருமாறு:-

- ★ அத்தியடி [ஜே.37]-71
- ★ கண்டுக்குளி [ஜே.38]-78
- ★ குருநகர் கிழக்கு [ஜே 35]-4
- ★ குருநகர் மேற்கு [ஜே 40]-8
- ★ யாழ். நகரம் [ஜே.41) 16
- ★ யாழ். பெரியகடை [ஜே.42]-9
- ★ கொட்டடி [ஜே.43] 59
- ★ நாவாந்துறை [ஜே.44]-15
- ★ சோனக தெரு [ஜே.45] 58
- ★ அரியாலை கிழக்கு [ஜே.46)-68
- ★ அரியாலை மேற்கு [ஜே 47]-106
- ★ அரியாலை மத்தி (ஜே.48]-99
- ★ வண் - வடமேற்கு [ஜே.49]-190
- ★ வண் - வட கிழக்கு [ஜே.50]-73

## திருமலையில் மூன்று பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்

திருகோணமலை, ஆகஸ்ட் 24

கடந்த வார இறுதியில் திருகோணமலைப் பகுதியில் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொலையுண்ட மூவரும் தமிழர்கள்.

செல்வநாயகபுரத்தைச் சேர்ந்த மயில்வாகனம் கனகராசா (21 வயது) 15 பேர் கொண்ட கோஷ்டி ஒன்றினுல் அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.

பாலையூற்ற வாசியான ஆர். மாணிக்கராசா அவரது வீட்டில் வைத்து சுடப்பட்டு மரணமானுர். இவர் துறைமுக தொழிலாளியாவார்.

செல்வநாயகபுரத்தில் அந்தனி ரபேஷ் (21) வயது என்பவர் கொலையுண்டார். (ஓ-150)

## வானும் சாரதியும் மாயம்

கொழும்பு, ஆக 24

களனி ஸ்ரீ சுதர்மவிகாரைக்குச் சொந்தமான வானையும் அதன் சாரதியும் காணவில்லை என்று விகாரையின் அதிபதி வண கன்னெருவ பிரேமஸ்ரீ தேரர் பொலீஸாருக்கு முறையிட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (ஓ-எ)


குழியுள் பிரேதம் இறக்கும் இயந்திரம்.
'டிவைஸ்' ஒப்பின் காஸ்கற்ஸ்,
குறஸ் காஸ்கற்ஸ் வகைகளுக்கு
நம்பகமான ஒரே இடம்!
பிறைற் ஹவுஸ்
அந்திய கால சேவை
(புனித யாகப்பர் ஆலய அருகாமை)
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
[ஒ/324]



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினுல் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24-08-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## பகுதிநேர மின்சாரத்திலும் தடங்கல்

யாழ்ப்பாணம், ஆக. 24

சுன்னாகத்திலிருந்து மின்சாரத்தை விநியோகிக்கும் ஜெனரேட்டர்களில் ஏற்பட்டதாகக் கூறப்படும் இயந்திரக்கோளாறு காரணமாக நேற்று மாலை 6-30 மணியளவில் மின்விநியோகத்தில் தடங்கல் ஏற்பட்டது.

இதன் காரணமாக யாழ். ஆஸ்பத்திரி, நல்லூர் ஆலயம் உட்பட இரவுநேர மின் விநியோகத்திற்குட்பட்ட பகுதிகள் பல இருளில் மூழ்கின. இரவு 8 மணியளவில் மீண்டும் மின் விநியோகம் கிடைத்தது. (உ-9)

## விரிவுரையாளர் கைது!

களனி பல்கலைக்கழக விரிவுரையாளர் சோமரத்தின பாலசூரியாவை இரகசிய பொலிஸார் கைதுசெய்தனர்.

தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே அவர் கைதானுர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-எ)

**செய்திச் சாரம்**

### குண்டு வீச்சு!

கொழும்பு. ஆக 24

மருதானையில் செவ்வாய் காலை பொலீஸ் ஜீப் ஒன்றின் மீது இனந்தெரியாதவர்கள் இரண்டு குண்டுகளை வீசினர், இதில் பொலீஸ் கான்டபிள் ஒருவர் காயமடைந்தார். (ஓ-எ)

### டாக்டர்கள் பாதுகாப்பு கேட்கிறுர்கள்

பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று கோரி இலங்கை பல் வைத்திய நிபுணர்கள் சங்கம் சுகாதார அமைச்சர் ரேணுகா ஹேரத்துக்கு விண்ணப்பித்து உள்ளது.

பல் வைத்திய நிபுணர் டாக்டர் சிறிபாதர என்பவர் கடந்த திங்கட்கிழமை புஞ்சி பொரளையில் உள்ள வைத்திய நிலையத்துக்கு முன்னுல் இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டார்.

அதனைத் தொடர்ந்தே சங்க உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

காயமடைந்த டாக்டர் சிறிபாதர தற்சமயம் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறுர். (உ-எ)

### அமைச்சரின் கார் கடத்தப்பட்டது

கொழும்பு ஆகஸ்ட் 24

உல்லாசப் பயணத்துறை அமைச்சர் ஏ.எம்.எஸ் அதிகாரியின் உத்தியோகக் கார் இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினுல் கடந்த செவ்வாய்க்கிழமை பொரளையில் வைத்து கடத்திச் செல்லப்பட்டது. (ஓ-எ)

### நல்லூரில் நாய் பிடிக்கும் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 24

நல்லூர் ஆலய சுற்றுடலை அசுத்தப்படுத்தும் கட்டாக்காலிநாய்களை பிடிக்கும் முயற்சியில் மாநகரசபைப் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர். [illegible]

## பரந்தனில் சூட்டுச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஆக 24

பரந்தன் சந்திக்குச் சமீபமாக நேற்று ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதிக்கு வந்த ஒரு கோஷ்டியினர் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இதேவேளை இப்பகுதியில் வேறெருவரின் சடலமும் கிடக்கக் காணப்பட்டதாகக் கூறப்பட்டது. அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. (ஓ-9)

### சபாநாயகரின்..:

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

★ தென் பகுதியில் வேறு இடங்களில் ஏழு பேர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ தலங்கம என்னும் இடத்தில் மாலினி பெரேரா என்பவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் முன்னர் தீவிரவாத இயக்கத்தில் உறுப்பினராக இருந்தவராவார்.

★ சியம்பலாந்துவவில் தப்பிச்செல்ல முயன்ற ஒருவர் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ லத்பந்துறையில் பாடசாலை அதிபர் டி. ஏ. எதிரிசிங்கா இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார். (ஓ-9)

### சமாதான..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

"கிழக்கு மாகாணத்தில் இரண்டாவது பெரும்பான்மை இனமாக உள்ள முஸ்லிம் மக்களின் பிரதிநிதி ஒருவருக்கும் இக்குழுவில் இடமளிக்கப்படவில்லை என்பது எமக்கு அதிர்ச்சி தருகிறது" -இப்படி ஜனுப் அஷ்ரப் தனது தந்தியில் தெரிவித்துள்ளார். (உ-எ)

### மக்களிடமிருந்து..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களின் கல்வி ஆர்வம் களைந்துவிடாது இருக்கச் செய்யும் நோக்கத்துடன் தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் முயற்சியால் மீண்டும் கல்வி நிலையங்களைத் திறந்து போதனைகளை நடைபெறச் செய்து வருவது யாவரும் அறிந்ததே.

கல்வி நிறுவனங்கள் திறக்கப்பட்ட பொழுது மாணவர்கள் ஆர்வம்கொண்டு வந்தனர். ஆனுல் இந்த வாரவில் தற்பொழுது தேக்க நிலை ஏற்பட்டுள்ளது.

அத்தகைய தேக்க நிலையை நாம் எல்லோரும் களைந்தெறிதல் வேண்டும். எதிர்காலம் இருள்சூழாதிருக்க — கல்வி ஒளி சுடர் விட்டுப் பிரகாசிக்க -பாடசாலைச் சிறார்களின் பள்ளி ஆர்வத்திற்கு உந்து விசையாக சமூக நிறுவனங்களும், பொதுமக்களும் அமைய வேண்டும்.

எனவே கல்வி மீது ஆர்வம் கொண்ட சமூக அமைப்புக்கள், நிறுவனங்கள், பொது மக்கள் யாவரையும் ஆக்கமும் ஊக்கமும் தருமாறு தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (உ-10)

### பாதுகாப்புக் --

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண முதலமைச்சருடன் ஆளுநரும் இடம்பெறவேண்டும்; இல்லையேல் இருவருமே இருக்கக்கூடாது என்று தெரிவித்துள்ளார்.

உயர்அதிகாரிகள் கொண்ட அந்தக்குழுவின் கூட்டத்துக்கு முதலமைச்சர் தலைமைவகிப்பதைத் தவிர்க்கும் முயற்சியாகவே இலங்கை அரசின் மீளாய்வு யோசனை அமைந்திருப்பதாக கொழும்புவட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (உ-எ)

கக் காணப்பட்டதாகக் கூறப்பட்டது. அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. (ஓ-9)

### பயிலுநர் ஆசிரியர்: பரீட்சை ஒத்திவைப்பு

கொழும்பு, ஆக 24

பயிலுநர் ஆசிரியர்களைத் தெரிவுசெய்வதற்கென இம்மாதம் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் அகில இலங்கை ரீதியில் நடக்க இருந்த போட்டிப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக கல்விச்சேவை ஆணைக்குழு நேற்று அறிவித்தது.

ஜனுதிபதியின் பணிப்புரையின் பேரில் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டதாகவும், புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ)

### பல்கலைக்கழக அறிமுக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஆக 24

யாழ் பல்கலைக்கழக மாணவர் அமைப்புகளின் அறிமுக நிகழ்ச்சி இன்று வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு புதிய மாணவர்களுக்கு நடைபெறவுள்ளது.

கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சிக்கு கலைப்பீட மாணவர்களை சமுகம் தருமாறு மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (உ.10)

### அளவெட்டி......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலா வருவார்.

நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 11.30, மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

இன்று தேர்வீதியுலா முடிந்ததும் 12 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (அ-51)

### இந்திய அமைதிப்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் அமைதிப்படை விலகல் விஷயம் மீளாய்வு செய்யப்படுவது அவசியமாகும்.

**சிவில் நிர்வாகம்**

வடக்கு — கிழக்கில் உள்ள யதார்த்த நிலையைக் கருத்திற்கொண்டு அங்குமீண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

சகலஇன மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துதல் அவசியமாகும்.

இந்தியப்படை இங்கு இருந்து துரிதமாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படவேண்டும். அந்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு புதுடில்லியில் உருவான யோசனைகள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.

அதேவேளையில், எமது நாட்டின் இறைமை, செயற்பாடுகள் ஆகியவற்றை உறுதிபடுத்தும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சகல இன அரசியல் குழுக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றப்படுவதற்கும் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள ஒழுங்குகளில், அவர்களின் கருத்துக்களுக்கு இடமளிக்கவும் நான் முயற்சி செய்திருக்கிறேன்.

அனைவருக்கும் பாதுகாப்பளிப்பது. நாட்டில் அமைதி - சகஜ நிலைமையை ஏற்படுத்துவது ஆகியவற்றை அடைவதற்கு இது வழிவகுக்கும்.

சகல மக்களினதும் பூரண பங்களிப்பின் மூலம் அமைதியை ஏற்படுத்த முடியும் என்று நான் நம்புகிறேன் — இப்படி ஜனுதிபதி தமது அறிக்கையில் தெரிவித்தார். (அ-)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி துரையப்பா ஐயர் மங்கையர்க்கரசி

திருமதி துரையப்பா ஐயர் மங்கையர்க்கரசி அவர்கள் சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற அ. துரையப்பா ஐயரின் மனைவியும், காலஞ்சென்ற கோமளாம்பிகை, வைத்திலிங்கம் (உதவி அரச அதிபர், சங்கானை), மகாதேவன் (சுகாதாரப் பரிசோதகர்), சிவபாலன் (சவுதி அரேபியா), லலிதாம்பிகை, சுரேந்திரன் (முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம்), விவேகானந்த ஐயர் (கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிங்காரவேல் (மட்டக்களப்பு), குகமூர்த்தி (இளைப்பாறிய பொறியியலாளர், கட்டிடத் திணைக்களம்), ஜெகதீஸ்வரி, இராசராஜேஸ்வரி, தவரஞ்சிதமலர், பத்மரஜனி, ஜெயராணி ஆகியோரின் மாமியாரும், சிறிதயாளன், நவயோகன், தயாநிதி, வளர்மதி, கல்யாணி, யசோதை, இராகவன், நிரஞ்சன், மாலினி, சுதா, ரவிசங்கர், சுரேகா, பிரிந்தா, கௌரி, கஜானனன்- சங்கீதா, நிருஜன், கஜரூபன், செந்தூரன், பிரணவன் ஆகியோரின் பேத்தியாரும், தர்சினி சுதர்சினி, நிதர்சினி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-08-1989 வியாழக்கிழமை இன்று காலை 9-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இலக்கம் 12, சீனியர் லேன் இல்லத்திலிருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
து. வைத்திலிங்கம்

இல. 12, சீனியர் லேன்,
கொக்குவில்.

(1595)

### திருமதி சின்னுச்சிப்பிள்ளை செல்லத்தம்பி

உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலடியைச் சேர்ந்த திருமதி சின்னுச்சிப்பிள்ளை செல்லத்தம்பி அவர்கள் 23-08-1989 அன்று நண்பகல் காலமானுர்.

இவர் செல்லத்தம்பியின் அன்பு மனைவியும், பாலசுந்தரம் (அக்கரைப்பற்று), ஜெகநாதன் (கனடா), சொர்ணகாந்தி (கனடா), இரத்தினமலர், தேவமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், செந்திவடிவேல் (கனடா), தருமராசா (கனடா). நிர்மலா (கனடா), காலஞ்சென்ற நாகராசா, இராஜேஸ்வரி (அக்கரைப்பற்று) ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுசாந்தினி, துஷ்சாந்தினி, ரமணி, ரஜீதா, மதனகுமார், லோகசபேசன், ரஞ்சித்குமார், கஜேந்திரன், மயூரன், பிரதீபன், செந்தூரன், நிஷாந்தினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 24-08-1989 வியாழக்கிழமை இன்று காலை 10-00 மணிக்கு வல்லை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

வீரபத்திரர் கோவிலடி,
உடுப்பிட்டி.

(1715)

### திருமதி இராசம்மா முருகேசு

திருமதி இராசம்மா முருகேசு காலமானுர். இவர் காரைநகர் களபூமி விளானையைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணம் பிரபல வர்த்தகர் S. V. முருகேசுவின் அன்பு மனைவியும், நாகேஸ்வரி (லண்டன்), தங்கராசா [லண்டன்], இராஜேஸ்வரி, நடராஜா, (றகுதாஸ் கொழும்பு), தங்கரத்தினம் (முருகன் அரிசி ஆலை கிளிநொச்சி), பூமணி, குணரத்தினம் (சிற்றி ஏஜென்சி யாழ்ப்பாணம்), சதானந்தன் (லண்டன்), சிவானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும். அம்பலவாணர் (கணக்காளர் லண்டன்), நாகேஸ்வரன் (இலங்கைவங்கி யாழ்ப்பாணம்), உமாதேவன் (ஹட்டன் நஷனல் வங்கி கொழும்பு), சரோஜினி (லண்டன்), பத்மராணி, ராசமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்மலா, சஞ்ஜீவன், இளங்கோ, சங்கர் சுரேகா ஆகியோரின் அன்புப் பேத்தியும், காலஞ்சென்ற பொ. வேலுப்பிள்ளை, காலஞ்சென்ற பொ. சதாசிவம், காலஞ்சென்ற சுந்தரம்மா, பொ. கந்தையா, பொ. இராமநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ச. வி. சந்தையா, ச. வி. ஆறுமுகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24—8—89 வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு காரைநகர் களபூமி இல்லமயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

விளானை,
களபூமி,
காரைநகர்.

தகவல்:
ச. வி. முருகேசு
கணவர்

(1694)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org